உ சிவமயம்.

கணபதி துணை.

மார்கழித் திங்களின்
சஷ்ட்டிவிரத மகாத்மியம்

அகத்தியமுனிவர் அருளிச்செய்த

அகவற்பாவும்

பரிமணங்குடி திரு. மு. முத்துபிள்ளையவர்களாலியற்றிய

வசனமும்

இஃது

நாட்டரசன்கோட்டையிலிருக்கும்

கரு. குப. குப்பாஞ்செட்டியாரவர்கள் குமாரர்

கருப்பஞ்செட்டியாரவர்களால்

சிவகெங்கை

ஸ்ரீ வித்தியா லக்ஷிமி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது

1933

ஆங்கிரஸ வருடம் மார்கழி மாதம் 15

உ சிவமயம்.

சிறப்புக்கவிகள்.

நாட்டரசன்கோட்டை நா.கருப்பஞ் செட்டியாரவர்கள் குமாரர்

நாராயணஞ்செட்டியாரவர்களியற்றியது.

—:():—

தென்மொழியைத் தந்துலகோர்க் குபகரித்த குறுமுனிவன்
றிங்கள் சூடி
தன்மகனும் பிள்ளையார் காதை அகவற்பாவாய்த்
தந்தான் அஃதை
பொன்மலிந்த பரிமணங் குதலத்தினில் வாழ்முத்து
பிள்ளைபுகழ்தக் கோன்இன்
நன்னிலத்தில் லெவர்க்கு மனத்தெளிவடைய உரையாக
நவின்றன மால்.

இத்தகை யகாதை அகவிற்பாவும் உரையும்
சேர்த் தியல்பதாக
அத்தனடியும் சித்தி வேழத்தின் அடியும்
அறுதின மாராமல்
பத்திசெயும் கருப்பாத் தானெனும் பெரியோன்
சிறத்தையுடன் பரிந்தன்பாக
இத்தரை மீதச்சிட்டு வழங்கி இருமையினின்பம்
~~வெய்தான் மன்னே.~~
எய்தினன் மன்னே

79-3

உ சிவமயம்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த மார்கழித் திங்களின் சஷ்ட்டிவிரத மகாத்மியம் விநாயகர் கதை.

——:o:——

காப்பு.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும்பெருக்கு — முருவாக்கு
மாதலால் வானேரு மானைமுகத்தோனைக்
காதலாற் கூப்புவர்தங்கை.

அகவற்பா.

பொன்னிறங்கடுக்கும் புனறருகுடிமித்
தென்மலையிருந்த சீர்சான்முனிவரன்
கந்தமும்மதக் கடவுடன்கதையினைச்
செந்தமிழ்வகையாற் றெளிவுறச்செப்பினன்
மந்தரகிரியில் வடபாலாங்கோர்
இந்துதவள்சோலை யிராசமாநகரியில்
அந்தணனொருவனு மாயிழையொருத்தியுஞ்
சுந்தரப்புதல்வரைப் பெறுதல்வேண்டிக்
கடவுளாலயமுங் கடிமலர்ப்பொய்கையுந்
தடமணிப்பள்ளியுந் தாம்பலசமைத்துப்
புதல்வரைப்பெரு வரம்புக்கெமக்கருளென
மதர்விழிபாகனை வணங்கிநின்றேத்த
மற்றவர்புரிந்திடு மாதவங்கண்டு
சிற்றிடையுமையாள் சிவனடிவணங்கிப்
பொற்சிலைவளைத்துப் புரமெரிப்படுத்த
பரனேயன்பர் பழவினையறுக்கும்
அரனேமறையவர்க் கருள்புரிந்திடுகென

நச்சுவேல்விழியாய் நற்குடிப்புதல்வர்
இச்சகத்திவர்தமக் கில்லையென்றனும்
அம்பிகைமனந்தளர்ந் தருவினையறுக்குந்
தம்பிரான்றிருச் சரணம்வணங்கி
நம்பிநோற்றலைந்தார் நாயேன்பொருட்டால்
எம்பிரானேயிவர்க் கின்னருள்புரிகென
மறுத்துமையுரைத்த மாற்றம்பொருமற்
கறுத்தவளத்தொடு கவுரியைநோக்கிப்
பேதாய்நீபோய்ப் பிறவெனமொழியக்
காதார்விழியாள் கையறவெய்தி
உருக்குநின்னைந்தெழுத் தோதாதொழியாக்
கருக்குழிவிழக் கடவதோவென்று
திருத்தாள்வணங்கிச் செய்பிழையடியேற்
கருத்தாநீபொறுத் தருளெனமொழியத்
தேங்கமழ்சடையோன் சிறிதேமுறுவல்செய்
தாங்குறுதனையா பணுகுவம்பாமென
மீதார்செவ்வத்து விண்ணோர்பயந்த
மாதாங்கொல்லென மாதராகி
ஆர்கலிஞால மழகுடன்றழைப்ப
சீர்மலிகுழலிமுன் சிறுவுருத்தாங்கிப்
பாவைசிற்றிலும் பந்தொடுகழங்கும்
யாவையும்பயின்ற வியல்பினளாகி
ஐயாண்டளவுமை யாடிவளர்ந்தபின்
எய்தாமகிழ்வுபெற் றீன்றவரியல்பினோர்
மானிடமறையோற்கு வதுவைகூட்ட
யாணுதறன்னை மகிழ்வுடன்கேட்கப்
பிறப்பிறப்பில்லாப் பெரியோற்கல்ல
தறத்தருவதுவைக் கணுகலன்யானென
மற்றவன்றன்னை மணமுறவெய்துதல்
பொற்றொடிமடந்தை நிற்கரிதெனப்புகல

அருந்தவமுயற்சியா லறுகுவன்யானெனத்
திருந்துநல்லறஞ் சீர்பெறவமைத்து
மணிமதுக்கமல மலர்த்தடங்குறுகி
அணிமலர்க்குழலி யருந்தவம்புரிய
அரிவைதனருந் தவமறிகுவன்யானென
இருவருமறியா விமையவர்பெருமான்
மான்மழுவேந்தும் வண்ணமதொழித்தொரு
மாணிடயோகி மறையவனாகிக்
குடைதண்டுடன் கிழக்கோலங்கொண்டு
மடமயிறவம் புரிவாவியிற்குறுகித்
தண்ணறுங்கூந்தற் றையலைநோக்கிப்
பண்ணுந்தவமென் பயன்வேண்டியெனக்
கொன்றையஞ்சடையனைக் கூடவென்றுரைக்க
நன்றெனநகைத்து நான்மறையாளன்
உடுப்பதுகோவண மடுப்பதுசுடலை
எடுப்பதுமழுமா னேறுவதெருது
பாம்புமெலும்பும் பலகலன்மாலையுஞ்
சாம்பருமணிந்து தலையோடேந்திப்
பிச்சைகொண்டுழலும் பிஞ்ஞகன்றன்னை
நச்சிநீசெய்தவ நகைதருநாமுனைக்
கடிமணம்புரியக் கருதிவந்தனம்பசுந்
தொடியணிமடந்தைநிற் கிதுவோதுணிபெனப்
பூங்கொடியருந்தவம் பூசரன்விலக்க
ஆங்கவனாணமுற் றயன்மனைபுகுதச்
சேடியர்வந்து செழுமலர்க்குழலியை
வாடுதலொழிகென வணங்கிநின்றேத்திச்
சிந்துரவாணுதற் றெரிவையரவர்தாந்
தந்தைதாயிருந்த தடமனைக்குறுகி
வாவிக்கரையில் வந்தொருமறையவன்
பாவைதன்செய்கையைப் பாற்றினனென்றலுங்

தாடொழுதடிகளைத் தருதிரிவ்விடையெனத்
தோடலர்கமலத் தொடைமறைமுனிவனை
மாடகயாழ்மொழி மங்கையர்கூடி
நீடியபுகழோய் நீயெழுந்தருள்கென
மைம்மலர்க்குழலி வந்தெமையழைக்கின்
அம்மனைபுகுவனென் றந்தணன்கூறப்
பொற்றொடிநீபோய்ப் பொய்கையினின்ற
நற்றவமுனிவை நடத்திக்கொணர்கெனச்
சிற்றிடைமடந்தை சீறினளாகி
மற்றம்மாதர் மதிமுகநோக்கி
நெற்றியிற்கண் ணுடை நிமலனுக்கல்லதென்
பொற்பமர்கொங்கை பொருந்துதலரிதென
மணமிடாதொழியினு மாதவமுனியை
இணையடிதொழுதிட லுலகியலாமெனத்
தந்தையுந்தாயுந் தாழ்ந்துநின் றுரைப்பச்
சிந்தைகறைந்து சீறுதலொழிந்து
தாய்சொன்மறுத்தல் பாவமென் றஞ்சி
நாயகியதற்கு நன்றெனவிசைந்தே
ஆயிழைமடந்தை யவனெதிர்சென்று
சேயிதழ்த்தாமரைச் சீறடிபணிந்து
மற்றவன்றன்னை மனையிற்கொணர்ந்தபின்
பொற்பமர்பலகையிற் பொலிவுறவிருத்தி
வண்ணப்பரிபுர மலரடியவற்கக்
கெண்ணெய்க்காப்புட னியைந்தனசாத்தி
மஞ்சனமாட்டி மணித்துகில்புனைந்து
விஞ்சிபதவிசின் மேற்படவிருத்தி
ஆடகப்பெருங்கலத் தருசுவையடிசில்
சூடகக்கையார் துலங்கப்படைக்க
அந்தணனமுது செய்தருளியபின்னர்ச்
சந்தனக்குங்குமஞ் சாந்தொடுபனிநீர்

இந்தனநுதலா ரியல்புடன்கொணர்ந்து
செந்துவர்மேனியிற் றிகழச்சாத்திச்
செவ்வந்திசெண்பகஞ் செங்கழுநீரொடு
திவ்வியபிரவுந் திருமுடிசாத்தித்
தக்கோலத்தொடு சாதிக்காயுங்
கர்ப்பூரத்தொடு கலந்தவெள்ளடைகாய்
ஒள்ளியபலவு முவந்துடன்வைத்து
வள்ளிநுண்ணிடையார் வணங்கிநின்றபின்
ஆங்கவளருத்தி கண்டகமிகமகிழ்ந்து
பூங்கொடிக்கினியருள் புரிகுவன்யானெனக்
கற்றைச்சடையுங் கங்கையுமதியமும்
நெற்றியினயனமு நீலகண்டமுங்
கரமிருநான்குங் கன்றுமான்மழுவும்
உரககங்கணமு மொப்பிடற்கரிய
பவளமேனியிற் பாங்குறவணிந்த
தவளவெண்ணீறுந் தயங்குமுந்நூலுங்
கோவணவிடையிற் கொடுஞ்சினவேங்கையின்
பூவணமான புலித்தோலுடையும்
எழைபடியா ரெழுபிறப்பறுக்குந்
தாளிடைச்சிலம்புஞ் சதுர்மறைச்சிலம்பும்
மாலயன்றேடியுங் காணாவடிவும்
பாலினன்மொழிக்குப் பரிந்துகாட்டலுந்
தாமக்குழலி தனைப்பயந்தவர்கள்
எமமுற்றார்களி னெழுமடிமகிழ்ந்து
பாவையைப்பெற்றுப் பயன்பெற்றோமெனக்
காவணமிட்டுக் காலுறப்புனைந்து
பஞ்சினும்பட்டினும் பழுதறவிதானித்து
மஞ்சுசூழ்கூடமதில் வாயிலெங்கணுந்
தோரணநாட்டித் துகிற்கொடியெடுத்துப்
பூரணப்பொற்குடம் பொலிவுறவைத்துக்

கரும்புங்கமுகுங் கதலியுநிறைத்துக்
குரும்பையந்தனத்தியைக் கோலஞ்செய்து
சங்கரனெங் கடார்குழறனக்கு
மங்கலநாணிடு மணநாளின்றெனத்
தங்குவான்முரசு சாற்றெனவள்ளுவன்
மங்கலமுரசு மறுகுதோற்றுதலும்
மாலயன்முதலிய வானவரெல்லாம்
ஆலமர்கடவு ளணிமணங்காண்பான்
விரும்பிவந்திண்டி விமலனையெதிர்ந்தே
அரும்பவிழ்தாமரை யடிவணங்கியபின்
வலம்புரிமுதலா மன்னுவாத்தியங்கள்
புலம்புகடலெனப் புடவிமுழுதார்ப்பக்
கொங்கலர்தாமரைக் கொடியிடைதனக்கங்
கங்குரார்ப்பண வருந்தொழின்முடித்தபின்
வார்சடையானையும் மடமயிறனையும்
ஓர்தனியாதனத் துவந்துடனிருத்தி
விதிமுறைசடங்கு விரிஞ்சன்பேண
புதியமங்கல நாண்பூட்டியருமறை
ஆகமநூல்வழி யாகுதிவேட்டபின்
கோகனகக்கொடி கொழுநன்முதலோர்
குறவார்கூந்தற் கொடியிடைதன்னுடன்
அரவார்கண்டனுக் கருகுபாலேந்த
அரிவையுமிறைவனு மாகுதிவலம்வந்
தரியமணவறை யுட்புகுந்தருளி
அரம்பையர்வாழ்த்த வமளியிற்றுயில்கொண்
டரம்பயில்கதிரோ னுதையஞ்செய்தபின்
விண்ணோர்க்கெல்லாம் விடைகொடுத்தருளிப்
பண்ணேர்மொழிமடப் பாவையைநோக்கி
ஒதநீர்வேலிகு முஞ்சையம்பதிபுகப்
போதுகவென்று போகியவந்நாள்

இளமதியணிசடை யெந்தைதன்னருளால்
வளமுடன்வழியின் மலைச்சாரலிலோர்
களிறும்பிடியுங் கலந்ததுகாணு
ஒளிர்மதிச்சடையோ னுமைமுகநோக்கி
ஓர்வழியன்றி மற்றோர்திசைதன்னைப்
பாராதேவா பணிமொழிபாயென
வாரார்முலையாண் மற்றுமுண்டோவென
மெல்லியலுமையவள் விரும்பினள்பார்த்தே
அல்லிசேர்குழலா ளான்முகம்பாரா
இவ்வகையாக வேண்டுமீங்கென
அவ்வகையானு மதற்குடம்பட்டு
மதகரியுரித்தோன் மதகளிறுகவும்
மதர்விழியுமைபிடி வடிவமாகவுங்
கூடியகலவியிற் குவலயம்விளங்க
நீடியவானோர் நெடுநிலைபோற்றத்
தங்குவெண்ணீறுந் தருமமுந்தழைப்ப
திங்கண்மும்மாரி யெங்கணும்பெருக
முண்டகமலர்போன் முழுதுஞ்சிவந்த
தண்டையுஞ்சதங்கையு மலம்புதாளிணையுங்
குண்டவண்டியுர் தண்டாமழமாலையு
மண்டொளிதழைத்த புண்டரநுதலு
முடிவுகண்டறியா முப்புரிநூலுஞ்
சுடர்விடுங்கனகத் தோளொருநான்குஞ்
சோதிவண்டாளத் தொடைபுனைகழுத்தும்
பூதலம்புரக்கும் பொற்கரிமுகமுந்
தவளக்கிம்புரி தருமருப்பிரண்டும்
பவளத்தொளிவாய்ப் பைந்துவரிதழும்
இமையாமுக்கணு மிருதழைச்செவியும்
அமையாநிலவுமி ழுவிர்ச்சடைமுடியும்
அந்திவண்ணமு மங்குசபாசமும்

உந்திச்சுழிமே லாதாரபந்தனமுடன்
ஐங்கரக்கரிமுகன் வந்தவதரித்தலும்
பொங்கரவணிந்தோன் புதல்வனைநோக்கி
வானோர்மண்ணோர் வந்துவழிபட
லானோர்வல்வினை யாசறவகற்றித்
தண்டுளவோனயன் சதமகன்முதலோர்க்
கின்றுமுதலிறையா யிருத்தியென்றருளித்
தெய்வநாயகியாந் திருந்திழையுமையுடன்
மைவளர்சோலை மாநகரம்புகுந்
தமையாக்கூட்டத் தநேககாலம்
இமையாமுக்க ணிறையிருந்தருளினன்
அந்நாடன்னி லசுரர்வந்தடைந்து
பொன்னாடாசுசெய் புரந்தான்முதலாம்
இமையவர்தங்கட் கிடரேசெய்ப
இமையவர்தலைவனுமி லைகருமாலும்
மதுமலரயனொடு வந்தெம்பிரான்றன்
பதிதனிலணுகிப் பரிந்துநின்றேத்தி
தம்பிரானைத் தாளிணைவணங்கி
எம்பிரானே யெங்குறைமுடியெனச்
சுடர்விடுமணிமுடிச் சூரனைவெல்லக்
கடல்பருகயில்வேல் கைத்தலத்தேந்தும்
புதல்வனைப்பயந்து தருகுவம்யாமென
அமரர்கோனுக் கான்விடைகொடுத்துச்
சமரவேல்விழித் தையலுந்தானுங்
கூடியகலவியிற் கூடாதாடலு
ளேடியவானோர் சேர்ந்துடன்கூடிப்
பாவகன்றன்னைப் பரிவுடனழைத்துக்
காவலர்சாரக் கயிலையிற்சென்று
சூரன்வன்மையுஞ் சூர்படுமிடுக்கணும்
வாரவணிந்தோற் குணர்த்திடுநீயென

காமனை யெரித்த கடவுளென் றஞ்சலும்
ஏமநாட்டரச னியல்புடனவில்வான்
அஞ்சாதேநீ யரன்முன்செல்ல
நஞ்சார்கண்ட னயனமூன்றனுள்
நெற்றியினயன நீயாமாதலிற்
குற்றம்வந்தடாதுநீ கூறுதிசென்றென
வானமன்மொழிய மற்றவன்றானு
ஈனமின்றாமென விருதயமொருப்பட்
டெமையாளிறைவ னுமையாளுடனே
அமையாவின்பத் தமர்ந்தினிதிருந்த
பள்ளிமண்டபம் பாவகன்குறுகத்
தெள்ளுதேன்மொழியாள் திகைத்தாநாணுறப்
பாவகன்வரவு பரமனுமறிந்துதன்
மூவிருநுதல்விழி முளரியினுதித்த
அறுமுகப்பொருளை யவன்கையிலளித்தலும்
வறியவன்பெற்ற வான்பொருள்போலச்
சோதிநீண்முடிச் சுடரோன்கொணர்ந்து
வாதராசன் வலக்கையிற்கொடுப்பப்
போர்புனைவாயுவும் பொறுக்கவொண்ணமற்
றூர்புனற்கங்கை தன்கையிற்கொடுப்பத்
தரும்புனற்கங்கையுந் தாங்கவொண்ணமற்
பொரும்புனற்சரவணப் பொய்கையிலிடுதலுஞ்
சரவணக்கமலந் தனினிலையுற்றுக்
குரவணிமூவிரு குருமணிமகுடமுந்
தோளிரண்டாறுந் துலங்குகுண்டலமுந்
தாளிரண்டுடனே தாமரைவதனமும்
மலையுந்தானவர் வாழ்வினைத்தொலைத்திடு
சிலையும்வேலுஞ் செஞ்சாமுங்கொண்
டறுமுகக்கடவுள்வந் தவதரித்திடுதலுங்
கறைமிடற்றிறையொடு கவுரிசென்றெடுத்துத்

தப்பதியிழந்த சதமகன்முதலிய
உம்பர்சிருளென வுயர்விடைவழங்க
வாரந்திகழுஞ் சிர்புனைவெற்புஞ்
சூரன்மார்புந் துளைபடநூறி
அமரர்கோவுக் கமருலகளித்துக்
குமரவேளுங் குவலயம்விளங்கிட
அமராவதியினமர்ந் தினிதிருந்தபின்
சமரவேலுடைத் தாரகன்றன்னை
கண்டுளமயங்கிக் கடவுளர்மகளிர்
விண்டனர்போன்று மெலிவதுகண்டே
யண்டரெல்லாம் வந்தடைவுடன்கூடி
மாதொருபாகன் மலரடிவணங்கித்
தாதணிகொன்றைச் சடைமுடிக்குன்றே
பிறவாதவனே பேரருட்கடலே
இறவாதவனே யிமையவர்க்கரசே
மருவளர்கடம்பன் மாநகர்புகாம
லருளல்வேண்டு மமலவென்றிறைஞ்சி
இமையோர்சொல்ல விறைவனும்வெகுண்டு
குன்றெறிசுடர்வேற் குமரனைமுனியக்
காவல்கொண்டோர் வினைக்கட்டறுத்தருளுஞ்
சேவலங்கொடியோன் றேசம்போகத்
திருந்திழையுமையா ளருந்தபசெய்தி
வருந்திடவவனை வானவனோக்கி
மங்கைநீதான் வருந்துதலொழிகெனச்
சக்கிரபாணியைச் சான்றுவிருத்தி
அக்கணிமார்பனு மாயிழைஉமையு
மிக்காற்குறு விருப்புடனுட
மன்றலார்கூந்தல் வென்றுமனமகிழ்ந்து
கன்றினால்விளவெறி கண்ணனைநோக்கிச்
குன்றினில்வென்றாரெனமொழிய

ஆதிவென்றுயிழை தோற்றுயென்று
தாதிமிளகத் தையலை நோக்கி
நீதியில்லா நெறியவனுரைக்க
மலைமகள் வெகுண்டு மற்றவன்றன்னை
நிலமிசைக்குருட்டுப் பாம்பாய்நீபோய்
வாரணமுகத்து மதலைமுன்னிருந்த
ஏரணியாலின் கீழ்க்கிடந்திடுகென
நாரணன்றானு நாகமாய்க்கிடந்தபின்
சீரணிகரிமுகத் திருமுகக்கடவுள்
கரும்புங்கிளங்குங் கதலியும்வருக்கையும்
விரும்புமாங்கனியும் வேண்டுவவளித்து
வழிபடுமடியார் வல்வினைதீர்த்தே
எழிறிகழாலின் கீழினிதிருந்த
கம்பமாமுகக் கடவுடன்பெருமையை
அம்புவியோருக் கறிவிப்போமென
உம்பருலகத் தோரெழுகன்னியர்
தம்பரூலேணியிற் றாரணிகுறுகிக்
கரிமுகக்கடவுளைக் கைதொழுதேத்திப்
பொரியவலடைகாய பொற்புறவைத்துக்
கார்த்திகைக்கார்த்திகை கழித்தபின்னாள்
ஆர்த்தகலிங்கத் தணியிழைவாங்கித்
திருவைத்தோய்ந்த திகழ்மணிப்புயத்தில்
இருபத்தோரிழை யின்புறக்கட்டி
வேதத்தாதியும் பூமியிலெழுத்தும்
ஆதிநாயகற் காகியவெழுத்தொடு
மூன்றெழுத்தாலே மொழிந்தமந்திரந்
தேன்றிகழ்குழலியர் சிந்தையுளடக்கிப்
பொருவருமலரடிப் பூசனைபுரிந்தே
இருபதுநாளு மிக்கதைகேட்டு
மற்றைநாடன்னின் மதிமுகமலர்விழிக்

கற்றைவார்குழற் கன்னியரெல்லாம்
வாரணமுகத்தவன் வாழ்பெருங்கோயில்
சீருடன்விளங்கத் திருவிளக்கிட்டுக்
கோமயங்கொண்டு குறைவறமெழுகி
எழுறுகரும்பு மெழிலுடைக்கதலியுந்
தாருடைக்கமுகுந் தழைபடுமஞ்சளுஞ்
சேறுடைச்செந்நெலுந் திசைதொறுநிரைத்தே
கோசிகங்கோடி கங்கொடுவிதானித்து
நீடியநூல்வலை நிறைகுடந்திருத்தி
ஐங்கரன்றிருவுரு வமைத்துள்ளன்பொடு
தேங்கிளநீருஞ் சீர்பழுக்காயும்
விரிந்தபாளையு மேதகுநீர்பூச்
சொரிந்தகேதகைத் தொல்கனியுடனே
பொருந்தியகவரி புனைமணிமாலை
தெரிந்தவையெல்லாந் திருந்தத்தூக்கி
மலைமகன்மதலையை மஞ்சனமாட்டிப்
பலநிறப்பட்டும் பழுதறப்புனைந்து
சிந்தூரநுதலிற் செறிந்தபொற்பட்டமும்
இந்திரதநுவென விலங்குமணியாரமும்
மகரப்பகுவாய் வாகுவலயமு
நிகரறவொளிவிடு நித்திலமாலை
திகழ்மணிமுடியொடு சிலம்புசெஞ்சதங்கை
புகரறுபூண்கள் பொலிவுறப்பூட்டிச்
சந்தனங்குங்குமஞ் சாந்தொடுபனிநீர்
இந்தனநுதலா ரியல்புடன்கொணர்ந்து
செந்துவர்மேனியிற் றிகழ்தரச்சாத்திச்
செருந்திசெண்பகஞ் செங்கழுநீரொடு
குருந்துமல்லிகை கோங்குகுன்றுத்தி
தாதகிபாதிரி தாருமந்தாரம்
மாதவிகடம்பு மகிழ்நீருளாமல்

நெய்தறயில நீலந்தாடிமங்
கொய்திடுகுல்லை கொன்றைபைங்குரவு
நரந்தையலரி நந்தியாவர்த்தங்
கரந்தைகமலங் கமழிருவேலி
செவ்வந்திபிச்சி சிறுசண்பகமலர்
மவ்வல்செவ்வல்லி மயிலையிருவாட்சி
தும்பையறுகு தூயிரும்பூளை
வம்பலர்பட்டிகை மத்தமோடெருக்குக்
காந்தள்கூதாளங் காக்கணமடம்பு
மாந்தளிருடனே வளர்பஞ்சவில்வம
பூந்தொடைகளபம் புழுகுகத்தூரி
ஏந்திளமுலையா ரிசையச்சாத்திக்
கதிர்நெற்பொரியுங் கண்டசர்க்கரையு
முதிர்நெற்கட்டியு முரித்ததிண்கரும்புந்
தேங்காய்செவ்விள நீர்பலகிழங்கும்
மாங்கனிவருக்கை வாழைப்பழமும்
எட்பொரியிருவி யிருதினைமாவும்
அப்பமுமவலு மாலங்காயும்
வெள்ளிலையடைக்காய் விரவுகற்பூரமோ
டொள்ளியபலவு முகந்துடன்வைத்துப்
பல்லியமார்ப்பப் பழுதறுதிருவிளக்
கெல்லியும்பகலென விருளறவிளங்கக்
கற்பகக்கடவுள் களிப்புறச்செய்து
மிக்கபுகழை விருப்புடனுங்கவர்
கேட்பதுகண்டு கேளாதிருந்த
பாம்புருவாகிய பழமறையாளன்
யாப்புறுகொங்கையீர் யானுநோற்பேனெனக்
காப்பிடுவித்துக் கனிவகைபலவும்
ஆங்கவன்றனக்கு வேண்டுவகொடுத்துப்
பாங்குடனிக்கதை பரிவுடன்கேட்டபின்

றெய்வமங்கையர் சிந்தித்தவைபெற
வைபநாயகியால் வாளரவானவன்
பண்டையின்வண்ணம் பார்மிசையெய்தி
அண்டர்நாயக னரிவையோடிருந்த
உஞ்சைமாநகர்புகுந் துமையடிவணங்க
வெஞ்சினமிகுத்தவள் விமலனைநோக்கி
யானிடுஞ்சாபம் நீக்கினர்யாரென
மானனகண்ணி மனக்கதவடைக்க
இறைவனிதற்குக் காரணமேதென
மறையவனுரைப்பான் மற்றுமுன்மதலை
தந்தருள்புரிந்த தவப்பயனிதெனச்
சிந்தையுண்மகிழ்ந்து தேவர்தேவனும்
பூங்கொடியடைத்த பொற்றாணீங்க
யாங்கதைக்கேட்போமெனநினைந்தருளிச்
சக்கிரபாணி தான்கதைசொல்ல
அக்கணிமார்ப வன்புடன்கேட்ப
மாதுமையடைத் தவன்றாணீங்க
மாதுமைதன்னை யானகைசெய்ய
நானெவாநீ நகைபுரிந்ததுவென்
றேனுர்சடையாய் தெளியச்செப்பெனப்
பொன்மலைமுலையாய் புகலக்கேளாய்
உன்மகனென்பி னுறுநிலையறிந்து
சிந்தையுண்மகிழ்ந்து சிரித்தேன்யானென
அந்தமில்லானை யாயிழைவணங்கி
தேக்கமழ்கடம்பன் றேவர்சேனபதி
ஈங்குவரும்படி யானுநோற்பேனென
இறையவன்கதைசொல வேந்திழைகேட்டபின்
குறமடமகளைக் குலமணம்புணர்ந்து
சாவணசம்பவன் றன்வரத்தெய்தி
அரவணியமல னடியிரஞ்சியபின்
பரிவுடனிக்கதை பார்தலந்தன்னில்

விரைகமழ்நறுந்தார் விக்கிரமார்க்கன்
தன்பெருமனையுந் தானுமிக்கதையை
அன்புடன்கேட்டே யரசுபெற்றபின்
மற்றவனகரின் மடந்தையர்தம்முள்
எற்பிறைநுதலா ளிலக்கணசுந்தரி
கழைபொருதோட்கையிற் கட்டியவிழையை
விழைவிலளாகி விதிவழிகளைந்து
வற்றியகொவ்வையின் மாட்டேபோட
கற்றையஞ்சடைமுடிக் கரிமுகனருளால்
ஆங்கதுதளிரு மடைவுடன்பூவு
நீங்கறப்பொலிந்து நிற்பதுகண்டு
வேப்பஞ்சேரின் பேய்ச்சுரையிருந்த
பூப்பயிலுங்குழற் பொற்றொடியொருத்தி
கொவ்வையடகது கொய்வாள்குறுகிச்
செவ்வியவரசன் றேவிமுன்போட்ட
இழையதிற்கிடப்பக் கண்டவளெடுத்துக்
குழையோடிகல்விழிக் கோதைகைக்கட்டிக்
கரிமுகக்கடவுளைக் கைதொழுதேத்தி
இருவினைதீரவிந் நோன்பையுநோற்றாள்
அப்பமோடடை காயநாட்கொண்டு
புட்பமும்வைத்துப் போற்றிநோற்றபின்
பண்டையினிரட்டிப் பதமவட்கருளக்
கொண்டுபோயரசன் கோயில்வைத்தனனே
விக்கிரமார்க்கன் விழிதுயிலளவில்
உக்கிரமான வுடைமணிகட்டித்
தண்டையுஞ்சதங்கையுந் தாளினின்றொலிப்ப
கொண்டல்போல்வருங் குஞ்சரக்கடவுள்
கலைக்குலவரசன் கனவிலெய்தி
அலக்கணெய்து மாசர்களரியே
இலக்கணசுந்தரி யிம்மனையிருக்கிற்
கலக்கம்வந்திடுங் கழித்திடப்புறத்தெனத்

துண்ணெனவிழித்துத் துணைவியைநோக்கி
அன்னாறுரைத்திடு மளவைதன்னில்
ஆனைகுதிரை யவைபலமடிந்து
மாநகர்கேடுறும் வகையதுகண்டே
அணியிழைபாலை யயன்மனையகற்ற
வணிகன்றன்மனை புகுந்தவளிருப்ப
மணியுமுத்தும் வன்கல்லாயிட
அயன்மனையவனு மகற்றியபின்னர்
மயிலியன்மேனி மடந்தையுண்மறுகிக்
குயவன்றன்மனை புகுந்தவளிருப்ப
குயக்கலமுடைந்து கொள்ளைபோக
அயற்கடையவனு மகற்றியபின்னர்க்
குயிற்பெடைநிகர்மொழிக் கோதையுமேங்கித்
தூசுகளார்க்குந் தொழிலோன்மனைபுகத்
தூசுகளெல்லாந் துணிந்துவேறாய்விட
ஆசறையவனு மகற்றியபின்னர்க்
காசறையளகக் காரிகைபுலம்பி
மாலைக்காரன் மனையிடைபுகுந்தபின்
மாலைபாம்பாம் வகையதுகண்டே
அயன்மனையவனு மகற்றியபின்னர்ப்
புயலின்வார்ந்த பூங்குழல்வாடி
உழவன்றன்மனை புகுந்தவளிருப்ப
வளர்பயிரழிந்துபல் வளமுங்குன்றப்
புரிகுழறனைப்பு றம்போவென்றகற்ற
அவ்வைதன்மனை புகுந்தவளிருப்ப
அவ்வைசென்ற வகங்கடோறும்
வைதனரெறிந்தனர் மடியத்தள்ளினர்
கைகொடுத்தினர் கன்னியென்றியம்பினர்
அவ்வைசால வறிவுதளர்ந்து
வவ்வியதுயரொடு மனையிடைபுகுந்த
கன்னியால்வந்த காரணமிஃதென

மின்னினுண்ணிடை மெல்லிநல்லாளே
சாணகமெடுத்து வாவெனப்புகலச்
சாணகத்தைத் தையல்சென்றெடுக்கச்
சாணகம்புழுவாய்த் தண்ணீர்வற்றிப்
பேணியவெல்லாம் பெரும்புழுவாக
மாணார்விழியாள் வருந்தக்கண்டு
தானேசென்று சாணகமெடுத்துக்
கோலமாகக் கொழுந்தரைமெழுகிப்
பாலின்மென்மொழிப் பாவையைநோக்கிப்
புத்தகமெடுத்து வாவெனப்புகல
புத்தகம்பாம்பாய்ப் புரிந்துநின்றாடக்
கொவ்வையிதழ்வாய்க் கொடிவிழுந்தேங்க
அவ்வைதானவளை யஞ்சலென்றழைத்துப்
புத்தகமெடுத்துப் பொருந்தப்பார்த்து
முத்தமிழறிந்த மூதறிவாட்டி
தவநெறிபிழைத்த தையலேநீதான்
சிவன்மகனென்பு தெளிவுறப்புரிகெனப்
பொரியவலடைகாய் முதற்பலபொருள்களுஞ்
தெரிவுறப்படைத்துச் சீர்வழிபாட்டுடன்
செவ்வியகாத்திற் றிருந்திழையாத்தே
அவ்வைமுவேழ் தினமருங்கதைசொல்ல
மவ்வலங்குழலாண் மனமகிழ்கூர்தரச்
செவ்வியோடிக்கதை தெளிவுறக்கேட்டபின்
பொற்புறுவிநாயகர் பொலிதிருவருளால்
விக்கிரமார்க்கன் வேட்டையிற்சென்று
தண்ணீர்வேட்டுத் தன்கிளைவிடுப்ப
உண்ணீர்க்காக முவப்பமொண்டுடனே
பண்ணேர்மொழியாள் பரிந்துடன்கொடுப்பச்
சேனையுந்தானுந் தேக்கிடவுண்டு
ஆனைகுதிரை யவைகளுமருந்தி
பின்னுந்தொலையாப் பெருமையைக்கண்டு

கன்னிகையிடத்திற் கடிதினடைந்துநீ
யாரெனவினவ விளமயிற்சாயலாள்
பேருரையாதுநாண் பெருகநின்றிடலும்
மின்னேரிடையன நடைமெல்லியலைத்
தன்மனையாளெனத் தரணிபனறிந்தே
ஒண்டேரேற்றி யுளமகிழ்வதனுடன்
கொண்டேர்புகுதக் கொற்றவேந்தன்
தலைநம்பிராட்டி தலைமைபெற்றுயா
நிலையருள்புரிந்த நிமலாபோற்றி
கற்பவர் தலைவாபோற்றி கருதுவோர் கண்ணேபோற்றி
நற்பதமெவர்க்குநல்கு நாயகக்களிறேபோற்றி
பொற்கரமைந்தாய்போற்றி புகர்முகக் குன்றேபோற்றி
அற்பமாய் மகத்தாய்நின்ற வாகுவாகனனேபோற்றி
அன்றுநீ டவனித்தேரை யச்சறுத்தமரர்போற்ற
நன்றருள் புரிந்தவேத நாயகக்களிறேபோற்றி
பண்டுதான் மேருவெற் பிற்பாரத மெழுதிவைத்த
வண்டமிழ்முதல்வாவிண்ணோர் வணங்குமாமுகவபோற்றி
ஈண்டுமாங் கனியைவேண்டி யிறைவனைவலஞ் செய்தங்கன்
னீண்டகை முதல்வாவென்று நினைப்பவர் தலைவாபோற்றி
எத்துவார் முதல்வாபோற்றி யிறைபவன் புதல்வாபோற்றி
சித்தநல் லுமையாளீன்ற செல்வனுஞ் சிறுவபோற்றி
அன்பொடுபரவி நாளுமடி தொழுவார்கட் கெல்லாந்
துன்பம் வாராமலின்பே தோன்றநின் றருள்வாய்போற்றி
கண்ணே போற்றி கருத்தேபோற்றி
எண்ணுருந்தாரக வெழுத்தேபோற்றி
ஆறணிசடையோ னருளேபோற்றி
நீறணிமேனி நிருமலபோற்றி
காமைந்துடைய களிறேபோற்றி
பாமன்றருநற் பாலாபோற்றி
செய்யதாள் போற்றிபோற்றி திரிபுரஞ்செற் றோன்பெற்ற
ஐயவென்வினை கடிந்தே யஞ்சலென் றருளுவாயே.

உ சிவமயம்.

கணபதி துணை.

அகஸ்தியமுனிவர் அருளிச்செய்த மார்கழித் திங்களின் சஷ்ட்டிவிரத மகாத்மியம் விநாயகர் கதை.

—:o:—

விநாயகர் காப்பு.

வெண்பா.

சந்தவளர் மாதவனுற் சாற்றுபிள்ளை யார்கதையாஞ்
செந்தமிழ்க்குத் தக்கவுரை செப்பவாந்—தந்தருளப்
பாதங்கள் போற்றிப் பரசுமடி யார்க்கெளிய
மாதங்க மாமுகத்தேவா.

அகத்தியர் வணக்கம்.

தருவிறைவன் வேண்டலாற் சலதியுண் டம்புவி
சமஞ்செய்து சண்பைமலர்நந்
தனமோங்கி டக்கரக நீர்கவிழ்த் திபமுகன்
றருகைநீர் கெண்டியேற்று
வெருவுமா யஞ்செய்வில் வலனைவா தாவியொடு
வீட்டிவின் ணுறநிவர்ந்த
விந்தகிரியைப்பிலத் தாழ்த்திக் கிரவுஞ் சனையும்
வெற்பா யுறச்சபித்து
மருவுதிரு மாலினைச் சிவமாக்கி வெள்ளிமால்
வரையின்க ணங்கிரசன்
வாதுவெல்லக் கந்த கிரிமுடிச் சிவசத்தி
வரைகொண்டு பூர்ச்சவனம்வைத்
திருபத மடைந்தவ விடும்பனுற் பழநிசேர்த்
தின்றமிழை யீந்துமலயத்
தென்றும் லோபாமுத்ரை யம்மையுடன் வாழ்கலச
னிணையடி யிறைஞ்சுவாமே.

கதாச்சாரம்.

ஆசிரிய விருத்தம்.

மந்தரகிரிக்கு வடபால் ராஜமா நகரில்
    மறையவனு மனையாளுநன்
மகப்பே றவாவித் தவஞ்செயக் கவுமாரி
    மகளாகி நோற்றமலனை
பணமுடித் துஞ்சைபுகு வழிமலைச் சாரினொரு
    மதகளிரு பிடியதாகி
மருவியிப முகமிலகு கணபதியை யுலகுய
    வழங்கிமா நகருறப்பின்
னிந்திரன் முதற்றேவர் வேண்டலாற் சண்முகனை
    யின்றயிற் படையாதியிந்
தேவவெஞ் சூர்தடிந் தமரருஞ் சரிமண
    மிசைந்துவிண் ணமருமுருகன்
எழில்கண்ட ரம்பையர்த நிலைதெரிந் தும்பர்தொழு
    மிறைகுறிப்பிற் கந்தவெற்
பேக உமையைத்தேற்றி வட்டாடி யம்மைஜெப
    மெய்தவிசன் ஜெயமெனச்
சிந்தையா ரப்புகலு மாலினைச் சத்திவிழி
    நிர்மலைப்பாம் பாகெனச்
செப்பிவட நிவினிற் கற்பக விநாயகன்
    றிகழா லடிக்கிடப்பச்
செகமேலா மிந்நோன்பு முறைபுரிந் துய்ந்திடத்
    தெய்வகன்னியர் கார்த்திகைத்
திங்கள்வரு மாரன்மறு தினமுனிரு பத்தொன்று
    தினமுமிழையாத் துத்துதித்
தைந்துகர னைப்புகழ வரவுமன் னெறியினின்
    றரியுருவடைந்து பெருமான்
அடிதொழச் சினமேவு மம்பிகைக் காளுற்ற
    தறையமேவ லவனுமேவ
ஆன்றோர்கள் கேள்விபெரு விக்ரமா தித்தன்மனை
    யாளோடு மந்தவிரதம்
ஆற்றியர சுரிமைபெற் றிடுகதைசொல் தமிழ்முனிவ
    னருள்பெருகி வாழ்குவமரோ.

உ

சிவமயம்.

கணபதி துணை.

அகத்திய முனிவரருளிச்செய்த

விநாயகர் கதையின் வசனம்.

முன்னொரு காலத்தில் பருவதராஜ புத்திரி திருக்கல்யாணத்தில் சர்வ புவனங்களுமீண்டி வடகோடு தாழ்ந்து தென்கோடுயர்ந்துவிட அது சம மாதற்பொருட்டு திருமணக்காட்சியை ஆங்கு தெரிசிப்பிக்கிறோம் பொதிகைக்குச் செல்லக்கடவை யென்ற சிவாக்ஞையின்படி சென்றவரும் விருத்திராசுர சங்கார நிமித்தம் இந்திரன் வேண்டுகோட்கிரங்கி சமுத்திர ஜலத்தை ஆசமனம் பண்ணினவரும், கைபிலேயிலிருந்த காவிரி நதியைத் தவத்தாற் கமண்டலத்திலடக்கி இந்திரன் நந்தவனந் தழைக்கவும், உலகஞ் செழிக்கவும் காக உருக்கொண்டு கவிழ்த்த ஸ்ரீ விநாயகமூர்த்தியின் ஒரு கைசலத்தால் காவிரி நதியைப் பின்புங் கமண்டலத்தில் நிரப்பிக்கொண்டவரும், முனிவர்களைக் கபடமாய் வஞ்சித்துக் கொன்றுதின்னும் வில்வலன் வாதாவியை வதம் பண்ணினவரும், மேருகிரியை மாறுகொண்டு சஞ்சரித்த ரியக்கமின்றி விண்ணுற நிமிர்ந்த விந்த கிரியினைப் பிலம்புகும்படி செய்தவரும், திருக்குற்றாலத்தில் விஷ்ணுமூர்த்தியைக் குறுகு குறுகென்று குழைத்துச் சிவலிங்கமாகச் செய்து ஆங்குள்ள வைணவர்களைப் புரங்கண்டவரும், கந்தகிரியி னனேக சிகரங்களில் சிவசக்தி வடிவாகிய இரண்டு சிகரத்தைத் தபோபலத்தால்ப் பூர்ச்சவனஞ் சேர்த்து பின்பு சரணாகதியடைந்த இடும்பாசுரனால் பழநிப்பதி சேர்ப்பித்தவரும், தெய்வதச் செந்தமிழைச் செகதலந்தழைக்கத் தந்தவரும் ஆகிய ஆற்றல்சால் அகத்திய முனிவர் ஆனைமுக விநாயகர் சரித்திரத்தை உலகமுய்யுமாறு திருவாய் மலர்ந்தருளியது.

முற்காலத்தில் மந்தரகிரியின் உத்தரபாகத்திலுள்ள சோலைகளாற் சூழப்பெற்ற இராஜமா நகரில் ஒரு பிராமணோத்தமனும் அவன் மனைவியாரும் புத்திரப்பேற்றை விரும்பி தேவாலயம், தடாகங்கூபம், பாடசாலை, உத்தியானவனம் ஆகிய தருமங்களைச் செய்தும், உமாமகேசரை வழிபாடாற்றியும் அரிய தவங்களைச் செய்தும் வந்த ஸ்திரீ புமான்களுக்கு அம்பிகை யிரங்கி தம்மையடைந்து வழிபடும் அன்பர்கள் பழவினை பாற்றும் பரமனே, இம்மறையோர்க் கருள்புரிந்திடுக வெனப் பிரார்த்திக்க விடநீரிற்றோய்ந்த வேல்போலுங் கண்களையுடைய பெண்மணி கேட்கக்கடவை, நற்குடிப்புதல்வர் இவர்களுக்கு இந்தச் சென்மத்தில் பிராப்தமில்லை யெனப் பெருமான் புகல அம்பிகை மறுத்தும் நம்பினோராதலின் எனது வேண்டுகோட்கிரங்கி இவர்க் கின்னருள் புரிந்திடவேண்டும் பெருமானேயென வற்புறுத்தப் பெருமான் சினந்து அம்பிகையை நீ போய்ப் பிறக்கக்கடவையென அம்பிகை யுளங்கவன்று நின்னையே நோக்கிவிடாத கட்புலனும் நின்னையே நினைக்கு நெஞ்சகமும் நின்னையே துதிக்கு நாவுமாக நின்றிருவடியைப்பிரியாதிருந்த யான் மாதா வுதரத்து மன்னுதல் கடவனோ செய்பிழை பொருத்தருளுக வெனத் தொளுதுவேண்டப் பெருமான் புன்னகையுடையராய் யாமே வந்துனை மணஞ் செய்துகொள்வாமெனத் திருவாய்மலர்ந்தருளப் பின்னர் உடனே அம்பிகை குளந்தைவடிவாய் நிற்க செல்வத்திற் சிறந்த வெந்தத் தெய்வதப் பெண்ணோ குளந்தை வடிவத்தைத் தாங்கி உலகந் தழைப்ப நமது முன்பு காணப்படுகிறது. நாம் செய்த பூஜாபலமே என்று பிராமண ஸ்திரீ புமான்கள் எடுத்துச்சென்று மனமகிழ்ச்சியாய் மிக்க உபசரிப்புடன் வளர்க்க வளர்ந்து சிற்றிலிழைத்தும் பந்துகழங்கு பயின்றும் ஐந்தாண்டுசெல்ல மேல் மாதா பிதாக்கள் அடங்கா மகிழ்ச்சி படைந்து தம்மினத்தில் ஒருவேதவிப்பிரனுக்கு வதுவை செய்ய உத்தேசித்துப் பெண்மணியை வினவ பிறப்பும் இறப்பும் இல்லாத மூலப்பொருளாகிய சிவபெருமானுக்கல்லது என்னை வதுவையாற்ற மைற்றயெவரும் அருகரல்லரென அப்பெண்மணி மறு

க்கத் தந்தைதாய் கேட்டு அஃது அரியபெரிய காரியமாகுமே யென அவ்வரிய பெரிய காரியத்தை எனது அரியபெரிய தவத்தாற் பெறுவேனெனச் சமாதானஞ்சொல்லிப்பின் கிரககிருத்தியங்களிற் சில அறச்செயல்களைக் குறைவறமுடித்து தாமரை மலர்கள் நிறைந்த ஆங்கோர் தடாகத்தை யணுகி மருவார்குழலி அருந்தவமுஞற்றி வருமளவில் அம்பிகை செய்யுந் தவத்தை யறியும்வண்ணம் அரியற்கரிய சிவபெருமான் தம் திருவுருக்கரந்து விருத்தயோகீசுரப் பிராமணவேடராய்த் தண்டுகமண்டலமாதி தாங்கிப்பெருமகிழ்ச்சியாளராய் தடாகத்திற் றவஞ்செய்யுந் தையலைநோக்கி ஆ ஆ பெண்மணி என்புதோன்றி யிவ்வுடலிளைப்ப அருந்தவம்புரிகின்றது. என்ன பிரயோசனங்கருதி அதை நமக்கு சவிஸ்தாரமாகச் சாற்றுவாயென்று வினவ அப்பெண்மணி எப்பொருட்கு மிறைவனாகிய சிவபெருமானை மணமுடித்தற்கென்று பதிலுரைக்க இதைக்கேள்வியுற்றயோகீஸ்வரர் கைகொட்டி நகைத்து ஆ பெண்மணி நீவிரும்பிய மணவாளன் பெருமை எத்தன்மைத்தென்று தெரியுமோ சொல்லுகிறேன் கேள் பிரதமமாக அவரணிந்து கொள்ளுகிற ஆபரணமோ பாம்பு, என்புமாலை, பூசுவது சுடுகாட்டுச்சாம்பல், புலித்தோலாடை தையற்கோவணம், சுடுகாட்டிற் பேய்க்கூட்டங்களுடன் ஆட்டம், ஏறுவது எருது, குணங்களோ ஒருவிதமல்ல எட்டுவிதம் தலையோட்டிலிரந்துண்டு திரிதல் இத்தன்மைய பித்தனை விரும்பி நீ அரிய தவங்களைச்செய்து நாயகனாகப்பெற நினைப்பது நகைப்புக்கிடனாகும் அடாது ஆதலால் உன்னை வதுவைசெய்யும்பொருட்டே யாம் யிங்கு விஜயம் செய்தோம் பெண்மணி உன்னபிப்பிராயம் யாது இத்தன்மைய சிரமங்களை விடுவிடுவென்று விருத்த வேடர் சொன்னவளவில் அப்பெண்மணி நாமிங்கிருந்தால் இவரேதுஞ் சொல்லிக்கொண்டிருப்பார் என அயலிற்செல்லப் பாங்கிகள் தேருதல் சொல்லி மருவார்குழலியின் மாதா பிதாக்களிடம் சென்று நடந்த வர்த்தமானங்களைச்சொல்ல அத்தகைய அடிகளை அழைத்து வரும்படி உத்தரவு செய்தார்கள். உடனே சேடியர்கள் தடாகக் கரையிலிருந்த விருத்தவேட அடிகளிடஞ்சென்று நமஸ்கரித்து

விட்டுக்கு யெழுந்தருளவேணுமென்று சொன்னார்கள். அடிகள் உங்கள் எசமானி மருவார்குழலி வந்து அழைப்பாளாகில் யாம் அங்கு விஜயம் செய்வோம் என அடிகள் திருவாய்மலர்ந்தருள இவைகளெல்லாம் பாங்கிகளாற் றெரிந்துகொண்ட மாதா பிதாக்கள் தமதருகில் நின்ற தவபுத்திரியாகிய பெண்மணியை பார்த்து அம்மா நீ போய்த் தடாகக்கரையிலிருக்கிற அடிகளை வெகு மரியாதையா யிங்கழைத்து வரக்கடவை என உத்தரவு செய்ய அப் பெண்மணி கோபங்கொண்டு தன தன்னை முகமாய் அம்மா நீங்களென்ன சொன்னாலும் நான் நெற்றிக்கண்ணையுடைய நிமலனுக்கு உரியவள் வேறு யாருக்கும் மணஞ்செய்யத் தக்கவளல்ல யென்று சொல்ல அன்னையும் அம்மா உனக்கு விவாகஞ் சம்மதமில்லாவிடினும் உலகியலின்படி பெரியவர்களை வந்தனை வழிபாடாதிய உபசாரஞ் செய்வதனால் ஒன்றுங் குறைந்துபோகமாட்டாது. நீயே போய் அழைத்துவாக் கடவையெனத் தாழ்ந்து வேண்ட உடனே அந்தப் பெண்மணி மாதுர்வாக்கிய பரிபாலனம் ஒரு கிரமந்தானே யெனச் சமாதானப்பட்டு விருத்தவேட அடிகளிடஞ்சென்று பணிந்து வெகு மரியாதையுடன் மனையிற் கொண்டுவந்து ஓர் ஆசனத்திலிருத்தி அஞ்சலிசெய்து எண்ணெக்காப்பிட்டு இயைந்த வாசனை வஸ்துக்களை அரைவகைகளாலும் திவ்ய தீர்த்தங்களாலும் திருமஞ்சன மாட்டி யீரந்துவட்டி அடிகளுக்குரிய அணிபணிகளால் அலங்காரஞ்செய்து வேறு ஒரு ஆசனத்திருத்தி வழிபாடாற்றி அப்பெண்மணி திருக்கரத்தா லறுசுவையின் னமுதருத்தி சந்தன தாம்பூலமுதவிப் பாங்கிகளுடன் வணங்கிப் பக்கத்தில்நின்ற பெண் மணியின் அன்பிற் ககமகிழ்ந்து விருத்த வேடாயிருந்த பெருமான் சந்திர சடாதரம் காளகண்டம் திரிநேத்திரம் சதுர்ப்புயம் அரவாபரணம் புலித்தோலாடை முதலிய சிவச்சின்னங்கள்தோன்ற அன்பர்களின் பிறவி வேதனையை பொழிக்கும் அரியபற்கரிய அண்ணல் தனது சாருப்பத் திருவுருவத்தைத் தரிசிப்பிக்க அப்பெண்மணியும் தாய் தந்தையர்களாகிய ஸ்திரீ புமான்களுங்கண்டு அகமகிழ்வுற்று இந்தப்பெண்மணியை புத்திரியாகப்பெற்று இம்மை அம்மை

உண்மை என்ற மும்மைப் பிரயோசனங்களு மடையப் பெற்றோ மென்று ஆனந்த சாகரத்தி லழுந்தினவர்களாய் விசுவகர்மனென் னும் தேவதச்சனுல் அநேக சோலைகளும் அநேக காததூர மகன்ற திருமதில்களும் அகழிகள் நாற்புறமும் கோபுரவாயல்களும் மாட மாளிகையாகிய உப்பரிக்கைகளும் அந்தப்புரம், ராஜவீதி, கடை வீதிகளிற் பூப்பந்தர், விசித்திரப்பந்தர், முத்துப்பந்தர், நிலைத்தேர் ஆதியவும் மகரதோரணங் கும்பகலசம், முளைப்பாலிகை சித்திரச் சாலை, நீர்ச்சாலை, நாடகசாலை, பாடகசாலை, நீராழிமண்டபம், தாம ரைத்தடாகம், செங்கழுநீரோடை கூபமாதியவும் யாகசாலை, ஓம குண்டம், மண்டலம்வேதிகையாதிய வகுத்து மற்றும் ஓமாதிகட் குரிய பண்ட பதார்த்தங்களு மமைத்துத் திருகைலாயத்தின் நடு வன் பவளக்கால் மண்டபம்போல நகரின்மத்தியில் வதுவை மண்ட பமும் நீலமணிகளாலிரண்டு சிம்மாஸனமும் பக்கங்களில் அபரிமித மான தவிசுகளும் அமைத்து இவ்வாறு நகரை யலங்கரிப்பித்து ஒற்றர்களால் மணவோலை கண்ட கொங்கர், வங்காதிய ஐம்பத் தாறு தேயமன்னரும் மற்றும் பிர்ம வைசியர் சூத்திரரும் வந்து குழுமினர். பின்பு விருத்த வேடராய் வந்த சிவபெருமானிடஞ் சென்று வணங்கி பெருமானே இன்று திருமணத்திற் குரிய சுப தினமாதலால் அடிகள் யெழுந்தருள வேண்டுமெனப் பிரார்த்திக் கப் பெருமான் அவ்வண்ணமாகுக வென்று விடையளித்துப் பின்பு திருவுள்ளப்பாங்கின்படி சாநித்யமான காலாக்கினி ருத்ரமூர்த்தியா கிய கோடிக்கணக்காய் ருத்ரகணங்களும் அரிபிரமேந்திராதியதேவ கணங்களும் வியாச வசிட்டாதிய முனிக்கணங்களும், தும்புரு, நாரதர், சித்தர், வித்தியாதரர், கருட, காந்தர்வாதியரும் சங்கு கன்னன் குடவயிறனுதிய பூதகணங்களும் குடைகொடியாதி தத் தமக்குரிய தொழில்தலை நின்றவர்களாய்ப் புடைசூழ்ந்து வரப் பெருமான் இடபாரூடராய் விஜயஞ்செய்து தேவவாத்திய முழங்க வதுவை மண்டபத்தருகில் யிடபத்தினின்றிழிந்து பாதுகை மேற் கொண்டு நின்ற தருணம் அம்பிகையை யீன்ற பாக்கியவதி மங்கல பெண்கள் சூழச்சென்றுப் பால், பனிநீர், கங்கா தீர்த்தமிவைகளி

ளுல் திருவடி கழுவி அத்தீர்த்தத்தைச் சிரசிற் புரோட்சித்தும் உட்கொண்டும் வாசனை திரவியங்கள் பூசி புஷ்பங்கள் போட்டு நமஸ்கரித்து நாணமுடையளாய்ச் சென்றவளவில் பெருமானும் வதுவை மண்டபஞ்சேர்ந்து சிம்மாசனத்தில் விற்றிருக்க காலாக்கினி ருத்ராதியரும் அரிபிரமேந்திராதியரும் வியாச வசிட்டாதியரும் மற்றுங்கணாதிபரும் அவரவர்க்கமைந்த ஆதனங்களிலமர்ந்துழிமுன்னமே அவணடைந்துள்ள தெய்வ மாதர்களில் மகாலட்சுமி சரசுவதியாதியரால் அம்பிகைக்கு ஆடை யாபரணாலங்காரஞ்செய்து இலக்குமி சரசுவதி யிருவருங் கரங்கொடுக்க பற்றியெழுந்து தேவ வாத்திய முழங்க சுந்தரி அடைப்பை, திலோத்தமை கண்ணாடி, அரம்பை காளாஞ்சி, ஊர்வசி ஆலவட்டம், மேனகை புஷ்பக்கமலம் தாங்கி வரவும் விஜயை பொற்பிரம்பைக் கரங்கொண்டு ஆளோச்சியாய் முன் சொல்லவும் பனிநீர் கலவையாதி கொண்டு ஏனைய தேவ மாதர்கள் இருடி பத்தினிகள் பக்கத்திற் சூழ்ந்துவரவும் திருமண மண்டபஞ் சென்று பெருமானருகில் அமைத்துள்ள சிம்மாஸனத்தில் அம்பிகை யமர்ந்த வளவில் அம்பிகையைப் பெற்ற பிராமண ஸ்திரிபுமான்கள் அவ்விடம் வந்து உமையொரு பாகத்தம்மையப்பர் பாதப்ரட்சாளனம் பண்ணி சந்தன புஷ்பமாதிய சாத்தி தூபதீபங்காட்டிச் சோடசோபசாரங்களுடன் மலரிட்டருச்சித்து உமையொருபாகன் திருவருட்பூரணத்திலழுந்தி நின்று பின் தீர்த்தமாதிய பிரசாதங்களை வதுவை மண்டபத்திலமர்ந்துள்ள காலாக்னி ருத்ராதி ருத்ரகணங்களும் அரிப்பிரமேந்திராதிய தேவகணங்களும் வியாச வசிட்டாதி முனிக்கணங்களும் தம்மினத்தரோடு பிராமண ஸ்திரிபுமானும் மற்ற யாவர்களும் பிரசாதங்கொண்டு உள்ளும் புறமுமுபயோகித்து அகமும் புறமுஞ் சுத்திசெய்து சர்வசந்தோஷ நாத்துடனமர்ந்துழி பெருமான் கரத்தின் மீது அம்பிகை திருக்கரத்தைச்சேர்த்து தட்சணை தாம்பூலம் வைத்து மந்தரோட்சாடணத்துடன் பிராமண ஸ்திரி கரக நீர் வார்ப்ப பிராமணோத்தமன் தாராதத்தஞ் செய்தனன். தேவர்கள் புஷ்பமாரி பொழிய தேவ வாத்ய முழங்க அரம்பையாட

தும்புரு நாரதர் பாட அடியவர் அரஹரா முழக்கம் செய்ய இத் தகைய சம்பிரமங்களுடன் தாராதெத்த முடிந்தபின் பால் பழந் தேன் சர்க்கரையாதிய மதுவர்க்கங்களை பொற்கலங்களிற் சமர்ப் பித்து பெருமானே யிதை உட்கொளவேண்டுமெனப் பிராமண ஸ்திரீபுமான்கள் பிரார்த்தித்து நிற்க பெருமான் அங்கிகாரஞ் செய்தோமெனத் திருக்கரத்தாற் பரிசித்தவுடன் பிரமதேவர் நவப் பிரமாக்களாதியருடன் யாகசாலையில் சுருதி சம்மத மந்திரோச்சா டணத்தோடு துடுவையால் நெய் வார்த்து ஓமாக்கினி வளர்த்து முனிவர்கள் வேதகோஷஞ்செய்யச் சங்கந்தூரிய முழங்க பிரம தேவன் வேள்விச்சடங்கை முடித்து பெருமான் அம்பிகைக்கு திருமங்கல்யதாரணஞ்செய்து கைப்பற்றி அம்பிகையும் பெருமா னும் திருக்கரங்களால் பொரிகளை அள்ளி ஓமாக்கினியில் ஆகுதி பண்ணி அக்கினி வலம்வந்து வேதவிற்பனருக்குத் தானதர்மஞ் செய்து அம்மி மிதித்து அருந்ததி கண்டு பெருமான் மணவாட்டி யுடன் மணவறையிலிருக்க தோடயம் மங்களம் நலுங்கு ஊஞ்சல் கலியாண வாழ்த்துக்களாதிய சுப சோபனங்கள் நடைபெற்று பின்பு பெருமானும் அம்பிகையும் வதுவை மண்டபத்தரிபணை மேவி அதன்பின் அமளியிற் றுயில்கொண்டு சூரிய உதயமானபின் அரிப்பிரமேந்திராதி தேவ கணங்கள் வியாச வசிட்டாதி முனிக் கணங்கள் மற்று யாவர்க்கும் தங்கள் தங்கள் எதாஸ்தானஞ் செல் லும்படி விடையளித்துச் சில நாள் சென்றபின் பெருமானம்பி கையை நோக்கி உஞ்சையம்பதியென்னும் அவந்திபுரிக்கு யாம் செல்லுதும் உடன்வரக் கடவை யென உத்திரவு செய்து செல்லு மிடத்து மந்தரகிரிச் சாரலில் விசுவகர்மனால் நிறுவிய ஒரு சித்திரச் சோலையில் களிறும் பிடியுங் கலந்த தன்மையைப் பெருமான் கண்டு அம்பிகையைப் பார்த்து இவ்விடத்தில் வேறொன்றையும் பாராது புரவடியைப் பார்த்துவரக் கடவை யென்று சுழலாகக் காருண்யத் தாற் கழற அம்பிகை மற்றுமுண்டோவென்று உற்று நோக்கு மிடத்து களிறும் பிடியுங் கலந்து நிற்றல் கண்டு பெருமானே யிஃ தென்னென வினவப் பெருமான் களிறுருவாய் தென்மனு மூவ

ரைத் தந்ததென்றும் பிடியுருவாய தன்மனு மூன்று சத்திகளைத் தந்ததென்றும் உலகோபகாரமாய் இவை கலந்து நிற்றல் நமது காருண்யமே யெனக் கழற அம்பிகை பெண் யானையையும் பெருமான் ஆண் யானையையு முற்று நோக்கிக் கலவி முடிவில் பொற்கரி முகமும் புண்டாரநுதலும் மூன்று லோசனமும் முப்புரி நூலும் தழையிருசெவியும் சதுர்ப்புஜமும் சந்திர சடாபாரமும் கிம்புரிக் கோடுகளும் ஐந்து கரமும் பாசாங்குசமும் முத்தாபரணமும் கடம்போலுதரமும் பாதச்சிலம்பும் திகழக் கோடி சூரியப்பிரகாசத்துடன் விநாயகப்பெருமான் திருவவதாரமாகி * அம்மையப்பரடி பணிந்து நிற்க சிவபெருமானும் உமாதேவியாரும் எடுத்தணைத்து உச்சிமோந்து மடித்தலத்திருத்தி பெருமான் விநாயகரைப் பார்த்து எனக்கன்னியமின்றி எனது புத்திர ரூபமாகிய உன்னைப் பிரதமத்தில் உள்ளன்போடு வளிபடுபவர்களின் இடையூற்றை நீக்கி அவ்வாறு செய்யாதவர்களுக்கு இடையூறு செய்து சிஷ்டபரிபாலன துஷ்ட நிக்கிரகம் புரிந்து ருத்ரகணம் தேவகணம் முனிக்கணம் மனிதக்கணம் முதலிய கணங்களுக்கெல்லாம் தலைமை வாய்ந்து தேவர்களுக் கிடர்செய்யும் கஜமுகாசுரனைக் கொன்று தேவர்களிடுக்கண்டீர்த்து எக்காலத்தும் எவ்விதத்தும் எப்பொருட்கு மிறைவனுய்க் கணபதி யென்னும் பெயருடன் வாழக் கடவை யென்றநுக்ரகித்து அம்பிகையும் பெருமானும் சித்திரச்சாலையினின்று நீங்கிச் சோலைகளாற் சூழப்பெற்று அதியுன்னதமாக விளக்கும் உஞ்சையம்பதி யென்னும் அவந்திமாநகரஞ் சேர்ந்து அமையாக்கூட்டத் தனேககாலம் அம்பிகை பாக னமர்ந்திருக்கு நாளில் வலிய சூரபத்மனால் அலைப்புண்ட நமது முறையீடு கேட்

விநாயகப்பெருமான யானை முகத்துடன் திருவவதாரமானதற்கு திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

* பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

டிாங்கி அம்பிகையைத் திருமணமாற்றிச் சத்திவேற் குமானைத் தந்து நம இடுக்கண் டவிர்ப்பாமென இன்னருள் புரிந்த யீசன் இதுகாறும் திருவருள் புரிந்திலர் என்று மகமேருவில் மால் அய னுதியர் கூடி முன்னரே சென்று சமயம் நோக்கி வருகென அனி லனையுய்த்து யாவருமொருங்கேகி நந்திதேவரை விடைபெற்றுக் கயிலைபுக்குக் கண்ணுதல் திருமுன்குரை யிரந்து வேண்ட கருணு கானுங் கறைமிடற்றண்ணல் சண்முகமூர்த்தமாய் ஐந்து முகத் தோ டதோமுகமுந்தந்து திருமுகங்களாறுகித்தீப்பொறியாருய்ப்ப அப்பொறிகள் மிக்க வெம்மையோ டுலகமெங்கும் பரவுதலைக் கண் டஞ்சி யகன்ற அமராதியர் அலக்கண்டீர ஒரு திருமுகத்துடனுற்று சிவபெருமான் விரிந்த செந்தீயை ஆரு பொரிகளாய் வரும்படி யுன்னி இப்பொறிகளை அக்கினி வாயுவு இவ்விரண்டு பேரையுந் தாங்கிக் கங்கையிலிடுமெனக் கழறி அப்பொரிகளைச் சுமக்குமாற்ற லும் அனுக்கிரகிப்ப அவ்வாறே சென்று கங்கையின் கையில் கொடுப்ப கங்கையானவள் அவ்வெப்பம் சகிக்காமல் சரவணப் பொய்கையிற் சேர்ப்ப சரவணப்பொய்கையில் விசாலம் பொருந்திய மலரின்மிசை ஆருமுகத்துடன் றவளும் சேயைக் கண்ணுற்ற கார்த்திகைப் பெண்கள் அருவருக்கும் ஆரு சிருவர்களாய் வர காதலோடு யெடுத்து வளர்த்தனர். நிற்க இரசிதகிரியில் நின்று யீசன் விமலையோடு விடையிவர்ந்து அவணுற்று அமலனைவ அம்பிகை திருக்காத்தாலணைத்தெடுக்க ஆறு திருமுகமும் பன்னிரு புயமுமாகித் தினகாோதயமெனத் திகழும் பாலனுக்குத் தமது திருமுலைப்பாலை அருத்தி விடைமேலேற்றிக் கயிலையை யடைய அற்புதமான பற்பல திருவிளையாடல்களாற்றி அம்மை அப்பரினடு வண் ஆருமுகப்பிரா னமர்ந்திருக்குங்கால் பின்னருஞ் சூராதிய ரிடுக்கண் சகிக்கமுடியாது வந்து முறையிடுந் தேவர்களுக்கிரங்கிப் பரமேசுரன் ஏகாதச ருத்ரரைப் படைக்கலங்களாகவும் சத்தியை வேலாயுதமாகவும் நல்கி நவ வீரர் இலக்கத்தவர் நூற்றெண்மர் இரண்டாயிரம் வெள்ளம் பூதப்படைகளும் இந்திரஞாலரதமும் யீந்து தேவ சேனுபதியாய்ச் சென்று சூரபத்மனுதிய அவுணரை

வென்று தேவர்களிடுக்கண்டீர்த்து வருகெனத் திருவாய் மலர்ந் தருளிய சிவபெருமானை மும்முறை வலம்வந்திறைஞ்சி முன்னிற் கும் முருகனை மார்போடணைத்து அம்பிகை திருக்கரத்தளிப்ப அம்பிகையு முச்சமிட்டு மடித்தலத்திருத்தி அமரர்களுய்ய அவு ணர்களைச் செயங்கொண்டு வருகவென் றாசிர்வதித்து விடையளிப்ப பூதப்படைகள் புடைசூழ அமரர்கள் போற்றிசைக்க இந்திரஞால ரதமிவர்ந்து இருநிலமடைந்து மாயமாபுரியி னோர்பால் பற்பல மாயை புரிந்து மயக்குங் கிரவுஞ்சகிரியைப் பிளந்து சேனைசையினி யங்களுடனே தாரகாசுரனைச்செற்று செயபேரிகை முழங்கப் பற் பல சிவாலய தெரிசனங்கள் செய்துகொண்டு தேவர்களைத்தச் செந்திலடைந்து சேனையுடன்றங்கி அசுரர் வரலாற்றைப் பிரகஸ் பதி அறையக்கேட்டு வீரமாமகேந்தரபுரியில் சூரன் முன்பு வீர வாகு தேவரைத் தூது விடுத்துச் சிங்கமுகவனைச் சங்கரித்துச் சூரபத்மனைச் செயங்கொண்டு மயில்வாகனரூடாய் வாரணகேத னந்திகழ வானவரோடு திருப்பரங்குன்றில் தெய்வகுஞ்சரியைத் திருமண முடித்து தேவருலகங் குடியேற்றி அமராபதியி லமர்ந் திருக்கும் நாளில் இந்திரன் நகரிற் றேவமாதர்களெல்லாங் குமாரக் கடவுளின் வடிவழகைக்கண்டு மயங்கித் தியங்கித் தங்கள் தங்கள் கிரகிர்த்தியங்களை மறந்தவராய் நாளுக்குநாள் மெலிவதைக்கண்ட தேவர்கள் கூடிப் பெருமானிடஞ்சென்று வணங்கிச் சிவபெரு மானே தேவமாதர்கள் குமரவேள் வடிவழகைக்கண்டு மயங்கித் தியங்கி மெலிவடைந்து கிரகிர்த்தியங்களை மறந்த தன்மையை நாங்கள் கண்டு சமுகம் விண்ணப்பஞ் செய்துகொண்டோம். திரு வுளப்பாங்கை யறியோம் என்று வணங்கி நிற்கப் பெருமான் குறிப் பையறிந்த குமரவேள் தெய்வக்குஞ்சரியோடு கந்தகிரிக்கு விஜய மாயினர். அப்போது அம்பிகை வருந்தி முகம்வாடி நிற்றலைக் கண்ட பெருமான் சமாதானஞ்சொல்லி முகவாட்டம் நீக்கி விஷ்ணு வைச் சாட்சியாய்வைத்து பெருமானும் அம்பிகையும் சூதாட் டத்தை யாரம்பித்து சூதாடி அம்பிகை வென்று பெருமான் தோல் வியடையப் பெருமா னம்பிகையைப்பார்த்து யாதுகுறித்தோ அறி

யேம். யேபார்வதி யாம் வென்று நீ தோல்விபடைந்தாயென அம்பிகை நகைத்துப் பெருமானே நமது வேதவாக்கால் லச்சை யில்லாமல் யிவ்வாறுரைப்பதென்னென வினவி வெற்றி யார்பாலென விஷ்ணுவை வினவ விஷ்ணுவும் சிவவாக்கை மருத்துரைக்க அஞ்சி வென்றவர் பெருமானென்றும், தோற்றது நீயே யென்றும் மேல் விளைவதையறியாது விஷ்ணுவானவர் பொய்க்கரியேபுகல அம்பிகை சினந்து ஆ பைத்தியமே கண்ணிற்கண்டது சொல்லாமல் நீ யிந்தப் பொய்க்கரிபுகன்றாய் ஆனதால் குருட்டு மலைப்பாம்பாகிக் கஷ்டப் படக்கடவை எனச் சபிக்க எப்பொருட்டு மிறைவனுகிய பெரு மான் குறிப்பறிந்தொழுகிய விஷ்னுவிற்கும் இத்தகைய கஷ்ட திசை நேருமென்றால் மனச்சாட்சியாய்ப் பொய்க்கரிபுகல்வோர் அடையுங் கஷ்ட நஷ்டம் யார்தானளவுபடுத்தக்கூடும். இது நிற்கச் சாபம்பெற்ற விஷ்ணுவானவர் நடுக்குற்று, உளங்கவன்று பெரு மான் றிருவடியிற்பணிந்து பெருமானே நானிதுபரியந்தஞ் செய்த அபராதங்களை மன்னிப்பதுமன்றி தேவிசாப நிவாரணமுந் திரு வாய் மலந்தருளவேண்டு மென்றிரந்து நிற்கப் பெருமான் விஷ்ணு வைப்பார்த்து வடதீபகஞ்சேர்ந்து அடிவாரத்தில் விநயகரோடி ருக்கும் ஆலமரப் பொந்தில் எமதடியை யுளத்துட்கொண்டு, ஆங் கமர்ந்திருப்பாயாகில் திரிபுவனத்திற்குந் துன்பத்தைச் செய்யுங் கஜமுகாசுரனைத் தேவர்கள் வேண்டுகோளால் வதம்பண்ணிக் கணேசன் அந்த வடதீபத்தின்வழி மீண்டுமடைவன். அந்தக் கணேசனைத் தெரிசிப்பையாயின் இக்கொடிய சாபம் அவ்விடத்தில் நீங்குமென்றனுக்கிரகித்தளவில் விஷ்ணுவானவர் குருட்டு மலைப் பாம்பின் வடிவுபெற்று வடதீபத்தி லோராலமரத்தடியில் ஐங்கரன் றிருவடியையும் உமாமகேசுவரர் திருவடியையும் நெஞ்சத்திற் கொண்டு தவமாகக்கிடந்து கொண்டிருக்க அந்த வடதீவிற் பெரிய ஆலவிருட்சத்தி னடிவாரத்தில் திருக்கோவில் கொண்டிருக்கும் மகாகணபதியை கரும்பு, கிளங்கு, வாழைக்கனி, பிலாக்கனி, மாங் கனி முதலியன வைத்து விசேட அபிடேக ஆராதனங்களால் வழி பாடியயற்றி அநேகர் இஷ்டசித்திகள் பெற்றுயர்ந்தனர். அத்

தகைய விநாயகப்பெருமானது பெருமையை உலகருக் குணர்த்த வெண்ணங்கொண்டு சப்தகன்னியர் நூலேணிவழியாகப் பூவுலகிற்கு வந்து ஆலடி மகா கணேசப்பெருமான் ஆலயத்தையடைந்து அவ்விடத்திய தீர்த்தத்தில் மூழ்கி, மடிகட்டி, விபூதிருத்ராட்சமாதி சிவச்சின்னங்களைத் தரித்துக் கொஞ்ச மவற்கடலை, பொறி, தட்சணை, தாம்பூலம் வைத்து நமஸ்கரித்துக் கன்னியரெழுவரும் சன்னிதானத்திற்குழுமி அதில் ஒரு சிரேஷ்ட கன்னிகை யேனையரை நோக்கி அம்மா ஏதோ வெனக்குக் கொஞ்சந் தெரிந்தவரையில் விநாகர் நோன்பின் விதியைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று கார்த்திகைத்திங்கள், கார்த்திகைக் கடுத்தநாளாகிய விநயக பூஜாரம்பமுதல் மார்கழித்திங்கள் விநாயகசட்டி பரியந்தம் இருபது நாளில் ஒவ்வொரு நாளும் விசேட அபிடேக ஆராதனஞ் செய்து வழிபாடியற்றி நமஸ்கரித்து விநாயகப்பெருமான் சாத்துப்படி வஸ்திரத்தில் ஓரோரிழை வாங்கி ஆண்பாலாயின் வலக்கரத்திலும், பெண்பாலாயின் இடக்கரத்திலுஞ் செவ்வையாய்க் கட்டியிருபது தினமும் விநாயகப்பெருமான் சரித்திரங்களைக் கேட்டும், வேதத்தாதியும், பூமியிலெழுத்தும் ஆதி நாயகர்க்காகிய வெழுத்தொடு மூன்றெழுத்தாலே முடிந்த மந்திரம் தேன்றிகழ்குழலியர் சிந்தையுளடக்கியும், இதில் வேதத்தாதியுமென்றது. ஆதியாகிய விநாயகரை வேதகோஷ்டங் களிலமைத்துக் கூறுவது இது வாயிகம்பூமியிலெழுத்து மென்றது சமஷ்டி பஞ்சபூத சரீரியாகிய விநாகப்பெருமானை வியஷ்டி பஞ்சபூத சரீரியாகிய சீவனுக் கன்னியமன்றித் தெரிசித்தல், இது காயிகம். ஆதிநாயகர்க்காகிய வெளுத்தென்றது சிதாகாச சொரூபமாகிய விநாயகர் திருவுருவை யிதயாகாச் சொருபமாகிய மனதிலடக்குதல், இதுமானசிகம் வாயிக காயிக மெவ்வாறுயினும் மனம் வழுவாதிருப்பின் அது ஆதிநாயகர்க்காகிய வெளுத்தாதலின் அவ்வாறு கூறினர். அப்படி மனம்வாக்குக்காயமென்ற திரிகரணங்களினால் பேசத்தகுந்ததும், பார்க்கத்தகுந்ததும் நினைக்கத்தகுந்ததுமான வெளுத்தென்றதுதான். யாதோவெனில் அகார உகார மகாரமென்று மூன்றெளுத்தாலே முடி

ந்தமந்திரம். பிரணவம் பிரணவவுடிவமே விநாயகரா தலில் திரிகாண சுத்தமாய்ச்செய்வது சித்தாந்தம். அதனுற்முன் எந்த மூர்த்திகளுக்குரிய அஷ்டாட்சர, பஞ்சாட்சர, சடாட்சர ஐம்பத்தோ ரட்சரமாதிய மந்திரங்களைப் பிரணவ சகிதமா யுச்சரிக்க வேண்டுமெனினும் எந்தக்காரியத்தையும் விநாயக வழிபாடாற்றித்தான் செய்யவேண்டுமெனினுமொக்கும் ஆதலின் விநாயகப்பெருமான் திருவுருவத்தை இதைய கமலத்திலமைத்து இவ்வாறு மனமொழி மெய்களால் வழிபாடியற்றி இந்த இருபதுநாளும் விநாயக மகாத்மியங்களடங்கிய சரிதங்களைக்கேட்டு இருபத்தியோராவது தினமாகிய மார்களித்திங்கள் விநாயக சஷ்டியன்று விசேட அபிடேக ஆராதனங்களுஞ்செய்து நோன்பு முடித்துப் பிரசாதங்கொண்டு இஷ்டசித்திகளைப்பெற்று விண்ணுலகஞ் செல்வோமாக வென்றுகூற ஏனைய கன்னியர் கேட்டு திருக்கார்த்திகையின் மறுதினம் விடியற்சாமத்திற் கெளுந்து தீபங்களேற்றி, பசுவின் சாணத்தால் ஆலயத்தை அலகிட்டு, மெளுக்கிட்டு, கரும்பு, கமுகு முதலியவைகளினல் காவணமிட்டு, வாழை, மஞ்சள்களை நாட்டி, மெல்லிய கொய்சக மமைந்த கோடிகங்கள் மேற்கட்டி தென்னம்பாளை, இளநீர்க்குலை, கவரிக்கற்றை, ஸ்படிகமாலை, செந்நெற்குலைகளைத் தொங்கவிட்டு பால், பழந்தேன், சர்க்கரை, இளநீர், பனிநீர் பழரசமாதிய கொண்டு விநாயகப்பெருமானைத் திருமஞ்சனமாட்டி பலவர்ணப்பட்டு பீதாம்பரங்களைச்சாத்தி சிந்தூர நுதலிற் பொற்பட்டமும் இந்திர தனுசை யொத்த நவமணியாரமும் புயங்களில் மகாமீன் வாயை யொத்த வாகுவலயமும், முத்துமாலையும், றெற்னகிரீடமும் மற்று மாபரணங்களும் திருவடிகளிற் சதங்கையுஞ் சிலம்பும் அலங்கரித்து சந்தனங் குங்குமம் கதம்பமாதிய சாத்தி செருந்தி, சண்பகம், குருந்துமல்லிகை, கோங்குமலையாத்தி திருவாத்தி, பாதிரி, தாதுமந்தாரம் மாதவி, குருக்கத்தி, கடம்பு, மகிழ், சிறுஞாழல், ஆம்பல், தாழை மாதுளை, வெட்சி, கொன்றை, குரவு, நாரத்தை, அலரி நந்தியாவர்த் தம் சிவகாந்தை, வெட்டிவேர், சிருசம்பகம், செவ்வந்திப்பூ, பிச்சிக்கொடி, முல்லைப்பூ,

ஆரக்காம்பல், கருமை கலந்த பிருவாட்சி சிந்தில் தும்பை, அறுகு
பூளை, ஊமத்தை, எருக்கு, கார்த்திகைப்பூ, கூதாளம், காக்கணம்,
அடம்பு, மாந்தளிராதிய பஞ்சவில்வ முதலிய மலர் மாலைகளாலலங்
கரித்து களபம், புழுகு, கஸ்தூரி ஆகிய வாசனை வஸ்துக்களுஞ்
சாத்தி செந்நெற்பொறி, கற்கண்டு, சர்க்கரை, கருப்பங்கட்டி,
கரும்பின் றுண்டுகளும் தேங்கனி, மாங்கனி. வாழைக்கனி, பிலாப்
பழம், செவ்விளநீர் பலவகைக் கிழங்குகள் எட்பொறி, அப்பவர்க்
கம், ஆலங்காயும், தினைமா, அவல் முதலிய பலகாரங்களும், வெற்
றிலை, பாக்கு, ஏலக்கிராம்பு, சாதிக்காய் பத்திரி வகைகளும் வை
த்து சுவர்ன புட்பஞ்சாத்திப் பலவகை வாத்திய முழங்க இரு பக்
கத்திலும் தீப சாலங்களேற்றி இது பகற்காலமே யென விளங்கக்
கற்பூர தீபாராதனமாதிய சோடசோபசாரங்களும்செய்து கன்னிய
ரெழுவருஞ் சந்நிதானத்திற்குழுமி விநாயகபுராணபடனங் கேட்டு
சர்வ சந்தோஷகர இத்யாதி சம்பிரமங்களின் ஆரவாரத்தால்
சூரியனுதயமாவதற்கு முன்னரே அந்தகாரம் நீங்கினற்போலவும்
பாம்புகளுக்கு கண்ணே செவியானதால் கேள்வியுமின்றி யாதும்
புலப்படாது குருட்டுப்பாம்பாய்க் கிடந்த விஷ்ட்ணுவானவர் சித்த
சுத்தி வந்து ஆ பெண்மணிகாள் இத்தகைய பெருமை வாய்ந்த
விநாயகர் நோன்பை யானும் நோற்றுய்வேனென்று வேண்டிக்
கொள்ள சர்ப்ப வுருவாய்க்கிடந்த விஷ்ட்ணுவின் அபிப்பிராயம்
போல் இழைகட்டிக் கனிவகையாதிய உதவிக் கன்னியர்கள் சர்வ
சந்தோஷத்துடன் புராணபடனமாதிய காலட்சேபம் பண்ணிக்
கொண்டு அவணிருந்த தருணம் விநாயகப்பெருமான் கஜமுகாசுர
சங்காரம்பண்ணிக் கணங்கள் புடைசூழ ஆகுவாகனாரூடராய்க்
காட்சி கொடுக்க குருட்டுப்பாம்பாய்க் கிடந்த விஷ்ணுவும் பழய
தேவ வடிவைப்பெற்று விநாயகப்பெருமானை வணங்கி நின்று
விஷ்ணுவானவர் அம்பிகை சாபம் நீங்கி உன் றிருவருளாலுய்ந்
தேன் இத்தன்மைய பெருமை வாய்ந்த மார்கழிச் சஷ்டியின்
நோன்பை நோற்று வருடந்தோறும் உன்னை வழிபடுமன்பர்கள்
யாவரேனும் வேண்டும் வரங்கொடுத்து ரெட்சிக்க வேண்டுமென

நமஸ்கரித்து நிற்க

இதை கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய கந்தப் புராணம் தக்ஷகாண்டம் அனந்தன் சாபம் நீங்கு படலம் நாலாவது பாடலில்

வின்ஞமம்புகல்கின்ற திங்கள்தன்னில் மிக்கமதி தனிலாரும் பக்கமாகும்
யின்னுளில்யானுன்னை யரிச்சித்திட்டவியற்கைபோல் யாருமினிபீரிலாஉன்
பொன்னருமலரடியேபுகலென்றுன்னிபூசைபுரிந்திடவுமவர்புன்கணெல்லா
அந்நாளேயகற்றிநீ யுலவாச்செல்வம் அளித்திடவும் வேண்டுமிஃதருள்க [ம்

எனக்கூறியிருக்கும் பாசுரத்தாற் காண்க. [யென்றான்

அனந்தன் யென்பது = மகாவிட்னு.

விநாயகப்பெருமான் அவ்வாறே அனுக்கிரகித்துக் கன்னியரெழுவருக்கும் வேண்டுமிஷ்டசித்தி நல்கி விநாயகப்பெருமான் ஆலடியினமர்ந்தருளினர். சப்த கன்னியர் விண்ணுலகஞ்செல்ல விஷ்ணுவும் உஞ்சையம்பதி சென்று உமா மகேசுரரை வணங்கி நிற்க அம்பிகை சினந்து பெருமானை நோக்கி என் சாபம் நீக்கினவர் யாரென வினவிக் கபாடபந்தனம் பண்ணிக்கொள்ளப் பெருமான் விஷ்ணுவை விசாரணை செய்தழி. விநாயகமூர்த்தியின் றிருவருட் பிரசாதமெனத் தெரிந்த பெருமானும் கபாடந் திறப்பதற்காக இத்தகைய சரித்திரங்களை விஷ்ணுவானவர் சொல்லச்செவி யேற்று கபாடந்தாழ நீக்கிவந்த அம்பிகையைப்பார்த்துப் பெருமான் நகை செய்ய அம்பிகை கபாடபந்தனம் நீக்கி நான் தானே வந்ததும் என்னைப்பார்த்துச் சிரித்ததற்கும் காரணம் யாது அதனுண்மையைத் திருவாய் மலர்ந்தருள்கப் பெருமானே யெனத் தொழுது வேண்ட எனக்கன்னியமல்லாத உன் சாபநிவாரணம் உன் மகன் விநாயகன் நோன்பு செய்யுமென்ற உருதியைநோக்கி மனமகிழ்ந்து சிரித்தேனெனப் பெருமான் அதனுண்மையைப் பேச அம்பிகை மனமகிழ்ந்து பெருமானை வணங்கி தேவசேனாதிபனைச் சூரனாதியரை வென்ற நமது வெற்றிவேற் குமரன் இங்குவரும்படி யானும் நோற்பேனெனத் தொழுது வேண்டப் பெருமான் ஐங்கரர்க்குரிய சரிதங்களும் சஷ்டிவிரத மகிமைகளையுஞ்சொல்ல அம்பிகை கேட்டு

மனமகிழ்ந்து அவ்விரதமனுஷ்டித்துக் கந்தவேள்வரவை எதிர்பார்த்தவளவில் குமாரக்கடவுள் வள்ளிநாயகியைத் திருமணமுடித்தவராய் உஞ்சையம்பதியில்வந்து உமையவள் பாகனை நின்றிறைஞ்சியடி தொழுது நிற்கக்கண்டு மகிழ்வுற்றிருந்தார்கள். இந்தச் சரித்திரங்களெல்லாம் ஆன்றோராற் கேள்வியுற்று விக்கிரமாதித்தன் தானுந், தன் மனைவியும் விநாயகர் நோன்பை யாற்றி அந்நெறி நின்று விநாயகப்பெருமான் திருவருட் பிரசாதத்தால் விக்கிரமாதித்த வரசனா யரசுரிமைபெற்று நீதிதவறாமற் செங்கோல் செலுத்திவரும் நாளில் அரசன் அந்தப்புர ஸ்திரீகளில் இலக்கணசுந்தரி யென்பவள் விநாயகர் நோன்பிற் றனதிடக்கரத்தில் கட்டிய யிழையை விருப்பின்றிக் களைந்து உலர்ந்த கொவ்வைச் செடியின்மீது போட அவ்விழையானது விநாயகப்பெருமான் திருவருளால் இலை, பூ, பிஞ்சுடனடர்ந்து சிரப்பாய் நிற்பதைக்கண்ட வேப்பஞ்சேரியிலுள்ள ஓரடிமைப் பெண் கொவ்வையிலை பறித்தற்கு அவணடைந்து விக்கிரமாதித்த வரசன் பத்தினி முன்னம்போட்ட இழையதிற் கிடத்தலையும், அதனால் வற்றிய கொவ்வையிலை தளிர், பூ, பிஞ்சுடனடர்ந்து நிற்றலையும் பார்த்து அவ்விழையை யெடுத்து விநாயகர் நோன்பை நோற்று விசேட அபிடேக ஆராதனங்களால் வழிபாடியற்றி நோன்பு முடிந்தபின் விநாயகப்பெருமான் திருவருளால் முன்னிலுமிரட்டிப்புச் செல்வம்வாய்ந்து அரசனால் மிக்கக் கௌரவப்படுத்தப் பெற்றனள். அஃதங்ஙனம் நிற்க விக்கிரமாதித்தவரசன் விழிதுயின்றதருணம் விநாயகப்பெருமான் ஆக்ரோஷமான உடையுமணியுங்கட்டித் திருவடிகளிற் றண்டை, சதங்கை யொலிக்க, இடிமின்னல் முழக்கங்களோடும் வருகிற வருஷகால மேகம்போல் கற்ஜிதமாய் விக்கிரமாதித்தவரசன் கனவிற்றோன்றி அரசனே உன் மனைவியாகிய இலக்கணசுந்தரி யென்பவள் உனதரண்மனையில் யினிமேலிருப்பாளாயின் கஷ்டநஷ்டம் அநேகத்திற்கு நீ பாத்திரமாய்விடுவாயிந்த நிமிஷமே அவளை யப்புறப்படுத்தக்கடவை யென்றாக்ஞாபித்து மறைதலும், அரசன் கண்விழித்து மனைவியை நோக்கி உன்னை அரண்மனையினின்றும் விலத்தல்செய்ய

உத்தேசித்தேனென்று சொல்லி நகர்வளத்தை நோக்கும்போது ஆளடிமை, வாகனாதி, மஹதைஸ்வரியங் குன்றி அநேகங் கேடுகள் மென்மேலும் வருகிறதென்று தெரிந்து இலக்கணசுந்தரியை அப்பு றப்படுத்த அவளும் மனந்தளர்ந்து ஒரு இரத்தின வர்த்தகன் கிரகத்திற் போய்த்தங்க அவ்விடத்திலுள்ள நவமணிகளெல்லாங் கூளாங்கற்களாய் வர்த்தகன் கஷ்டதிசையை யடைந்து அவனும் விலக்க மனம்வருந்தி ஒரு குயவன் வீட்டிற் புகுந்திருக்கும்போது குயவன் செய்யும் மண்பாண்டங்களெல்லா முடைந்து கொள்ளை போக அவனுமப்புறப்படுத்த இலக்கணசுந்தரி யேக்கமுற்று ஒரு சேணியன் வீட்டிற்போய்ச்சேர சேணியன் நெய்திருந்த வஸ்த்தி ரங்களெல்லாந் தாறுமாறாய்க்கிழிந்து அநேக கஷ்ட நிஷ்டூரங்களுக் காளாகி இந்த மகராசி வந்த முகூர்த்தந் தானென்று அவனும் அரிந்து விலக்கிட பிறகு அந்த அம்மாள் புலம்பி ஒரு மாலை கட்டி மனையிற்புகுந்திருக்க மாலைகளெல்லாஞ் சற்பங்களாய் புரளக்கண்டு அவனும் அம்மா நீங்கள் வந்த வழியைப்பாருங்களென்று அனுப்பி விட இலக்கணசுந்தரி மனங்கவன்று ஒருழவன் வீட்டிற் றங்கி யிருப்ப அவ்விடத்துப் பயிர்களழிந்து பலவித கஷ்ட நஷ்டங்கள் நேரக் காரணந்தெரிந்து அவனும் அம்மா நீங்கள் நல்ல வேளையிற் செல்லுங்களென்று நயந்தனுப்ப பின்பு அவ்வைக்கிழவி வீட்டிற் றங்கியிருக்க அந்த ஔவையார் சென்றவிடங்களில் மிக மரியாதை யாய் நடப்பவரெல்லாம் அவமரியாதையாய்க் கள்ளி திருடியென்று வைதும் இடித்துப் பிடித்துத்தள்ளியும் நடத்திய தொந்தரை களால் பிரக்ஞாபங்கத்துடன் வீடு வந்து சேர்ந்து ஔவையார் யோசனை பண்ணி இது இலக்கணசுந்தரியால் வந்த வினையென் றறிந்து அம்மா கொஞ்சம் பசுவின் சாணங் கொண்டுவாவென அந்த அம்மாள் போய் சாணத்திற் கையை வைத்தவுடன் சாணம் புழுவாய் நெளிந்து நீர் வற்றிப் பெரும்புழுவாய் விடக்கண்ட இலக்கணசுந்தரி அம்மா நான் தொட்டது துலங்காமலும் வைத்தது வாழாமலும் என் கதி யிப்படியானல் நான் செயற்பாலதியாதென வருந்தக்கண்ட ஔவையார் தானே போய்ப் பசுவின் சாண

யெடுத்துவந்து அலகிட்டு சதுரமாய் மெழுகிக் கோலமிட்டு அதோ யிருக்குந் திருமுறைப் புத்தகத்தை யிங்கெடுத்துவா வென்று உத்தரவு செய்ய அந்த அம்மாள் போய்த் திருமுறைப் புத்தகத்தில் கையை வைத்தவளவில் சற்பவுருவாய்ப் படம் விரித்தாடக்கண்ட இலக்கணசுந்தரி முகம் வாடி நிற்க ஔவையார் பயப்படாதே யென்று கையமைத்துத் தானே போய் உள்ளமுடையான் என்ற நூலை யாராய்ந்து அறிந்துகொண்டு அம்மா யிலக்கணசுந்தரி உன்னுடைய தவநெறியிற் பிழை நேர்ந்து இத்தன்மைய தீங்குகள் விளைவிற்குக் காரணமாகத்தெரிகிறது. ஆதலால் விநாயகர் நோன்பை ஆரம்பித்து முடித்து விநாயகப்பெருமான் றிருவருளால் உன்னுடைய கஷ்டதிசை நீங்கி நீடுழியாய் வாழ் யிதுதான் சுருக்க வழியாகத் தெரிகிறதென்று கார்த்திகைத் திங்கள் திருக்கார்த்திகைக் கடுத்த நாள் விநாயக பூசாரம்பம் முதல் மார்கழிச் சஷ்டி பரியந்தம் இருபத்தொரு தினமும் விசேட அபிடேக ஆராதனைங்களும் தேங்காய் பழம் பொரி யவலாதிய படைத்து தட்சணை தாம்பூலம் வைத்து விநாயகப்பெருமானை யாராதித்து இடக்காதில் இழையாத்து இருபத்தொரு நாளும் விநாயகப்பெருமான் சரிதங்களை ஔவையார் சொல்லப் பக்தியாய் கேட்டுப் பிரசாதங் கொண்டு நோன்பு முடித்து இலக்கணசுந்தரி சந்தோஷகரத்துடன் ஔவையார் மனையிலமர்ந்திருக்க விநாயகப்பெருமான் றிருவருளால் விக்கிரமாதித்தவரசன் வேட்டைமாற்கஞ்சென்று நீர்நசையால் தாகசாந்தியைக் குறித்து ஓர் சேவகன் ஔவைகிரகத்திற் சென்று தாகத்திற்கு சுத்தஜலம் வேண்டுமென்று யாசிக்க ஔவைகிரகத்திலிருந்த இலக்கணசுந்தரி கெண்டியில் சுத்தஜலம் வார்க்க சேவகன் அரசனிடம் கொண்டுபோய்க் கொடுத்துத் தாகசாந்தி செய்துகொள்ளும்படி வேண்ட அரசன் அவ்வண்ணம் கெண்டி ஜலத்தாற் றாகசாந்தி செய்துகொண்டு மீந்ததை ஏனையருக் குதவும்படி சொல்ல யேனையருக்கும் மற்றுஞ் சைனியங்களுக்கும் போதுமானதாகவும் மீந்திருக்கவும் கண்டதுமன்றி அந்த கெண்டி ஜலத்தை தாகசாந்தி செய்துகொண்ட விக்கிரமாதித்தவாசனும்

மந்திரி சேனாதிபர்களும் மற்றும் கஜதுரகபதாதிகளும் தேவாமு
ர்த முண்டு தெகிட்டினவர்கள் போலச் சந்தோஷசாகரத்திலழுந்தி
நிற்க இதற்குக் காரணங் கெண்டி ஜலம் என்றறிந்து அரசன் சேவ
கனை யழைத்து தாகத்திற்குக் கெண்டியில் ஜலம் கொண்டுவந்ததை
விசாரணை செய்ய சேவகன் அரசனை வணங்கி யிவ்வூரிலுள்ள
ஔவைக்கிழவி வீட்டில் யான்போ யாசித்தேன். ஒரு அம்மாள்
இந்தக் கெண்டியில் சுத்தஜலங் கொண்டுவந்து யார்த்தார்களிது
தான் அறிவேன் என நமஸ்கரிக்க உடனே விக்கிரமாதித்த அரசன்
மந்திரி பிரதானிகள் மற்றும் ரதகஜதுரகபதாதிகள் சூழ ஔவை
யார் கிரகத்தை யடைந்து இலக்கணசுந்தரியைக் கண்டு அம்மா நீ
யார் உன் ஊர் பெயர் யாது யென்று வினவ அந்த அம்மாள் அதிக
நாணமுடையவளாய் மாறுத்தரங் கொடாமல் நின்றவளவில் ஓகோ
சர்வலெட்சணமும் வாய்ந்த இந்தப் பெண்மணி நமது இலக்கண
சுந்தரியல்லவா வென்றறிந்து எடுத்தணைத்து தன்னோடு ரதாரோ
கணமாக்கி சர்வ மங்கள சுப சோபன சந்தோஷகரத்துடன்
தன்னுடைய பட்டிணத்திற் றனதரண்மனை சேர்ந்து விக்கிரமா
தித்த அரசன் மனுநீதி தவறாமற் செங்கோல் செலுத்தி வாழ்ந்
திருந்தான். இந்தப்பிரகாரம் இந்நோன்பை நோற்பவர்கள் அன்பு
செய்பவர்கள் மனமொழி மெய்களாற் றன்னை வளிபாடு செய்பவர்
கள் பாவரெனினும் அவர்கட்கு விநாயகப்பெருமான் இன்னருள்
புரிவார் என்பது சத்தியம். (தலைநம்பிராட்டி தலைமைபெற்றுயா
நிலையருள்புரிந்த நிமலா போற்றி யென்றதனால்) உமாதேவியாரும்
யிவ்விரதத்தை யனுட்டித்து வேண்டியதைப் பெற்றனள். கங்கா
தேவியும் இவ்விரத மனுட்டித்து சிரசிலிருக்கப்பெற்றனள். அவ்
வண்ணம் யாவராயினும் அடைந்தவர்க்கருளும் ஆதியே உன்னை
நமஸ்க்கரிக்கின்றேன்.

விநாயகர் கதை
முற்றிற்று.

வெண்பா.

கல்லாதவர் நோற்பிற் கற்பவைநன் றாகவுறும்
இல்லாதவர் நோற்பி னின்மைபோம்—பொல்லாத
பாவம்போ மிக்க பழவினைநோய் தானும்போம்
வேகமலம் போமே மிக.

வெள்ளை யெருதேறும் விரிசடையோ னீன்றளித்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை—யுள்ளபடி
கற்றவரு நோற்றவருங் காதலுடன் கேட்டவரும்
பெற்றிடுவார் கற்பகத்தின் பேறு.

பொற்பனைக் கைமுக்கட் புகர்முகத்து நீண்மவுலிக்
சற்பகத்தி னோன்பைக் கருத்துடனே—சொற்றபடி
நோற்றோர் மிகவாழ்வர் நோலா திருந்துகதை
கேட்போர்க்கும் வாராது கேடு.

வாழி விருத்தம்

உலக முழுவதுமுய்ய வுமையை மணந்தா னருளோங் காரரூபத்
திலகு கணபதிவாழி யிபமுகத்தோ னோன்பின் விதியியம்புஞ் சந்த
மலய முனிவரன்வாழி மார்களிச் சட்டியின் விரதமகிழ்ந்து செய்யு
மலகி லடியவர்வாழி யருணெறிச் சைவத் தழையுற்றநிலம் வாழி.

முற்றிற்று.

உ சிவமயம்.

கவனிப்பு.

கார்த்திகைத் திங்களின் திருக்கார்த்திகை யடுத்த தினமுதல் விரத ஆரம்பஞ்செய்து கட்டிய வஸ்திரத்தில் யிருபத்தோரிழை யெடுத்து ஆண்பாலாயின் வலக்காத்திலும் பெண்பாலாயின் யிடக்காத்திலும்கட்டி இருபது நாளும் ஒரு வேளை போசனமருந்தி யிப்புத்தகத்தை பாராயணஞ்செய்து இருபத்தியொரா நாள் சஷ்டி அன்று சுத்தமான யிடத்தில் சாணத்தால் மெழுகி கோலமிட்டு தீபசாலங்களேற்றி விநாயகர் திருவுருவத்தை வைத்து கரும்பு கிழங்கு கனிவகை பலகாரங்கள் வைத்து நிவேதனம்பண்ணி வந்தனை வழிபாடாதிய நமஸ்காரங்கள்செய்து யிப்புத்தகத்தை ஒருவரை வாசிக்கும்படி செய்து யேனையோர் கேட்டு விரதபூர்த்திசெய்து கையில்கட்டியிருக்கிற யிழையை தீப சாலங்களிற்சேர்த்து அன்று இராத்திரி விநாயகருக்கு நிவேதித்த பலகாரங்களையே ஆகாரமாகக்கொள்ளவேண்டியது. இந்நோன்பு யாழ்பாண முதலியவிடங்களில் விசேஷமாக அநுஷ்டித்து வருகின்றனர். இவ்விரதம் அநுட்டித்தவர்கள் வேண்டிய நன்மைகளை அடைந்ததும், அநுட்டித்த அலச்சியமா யிடையில் நழுவவிட்டோர்கள் பட்ட கஷ்டமும் பலவாக யிருத்தல் இப்புத்தகத்தில் காணலாம். சுபம் சுபம்.

சிவமயம்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
சிறப்புக்கவி			
2-வது பாட்டு	முதல் வரி	அகவிற்பா	அகவற்பா
,, ,,	கடைசி வரி	மெய்தான்மன்னே	எய்தினனே
2	17	மீதார்செவ்வதது	மீதார்செல்வத்து
15	12	வேப்பஞசேரின்	வேப்பஞ்சேரியின்
25	11	திருகைலாய	திருக்கைலாய
26	13	முன்செரல்லவும்	முன்செல்லவும்
27	30	களிறுருவாய்	களிறுருவாய
29	24	திருளையாடல்	திருவிளையாடல்
31	9	எப்பொருட்டு	எப்பொருட்கு
32	9	விநாகர்	விநாயகர்
33	24	ரெற்ன	ரெத்ன
33	30	சிருசம்பகம்	சிருசன்பகம்